CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

பங்குனி மாதம் 17ம் திகதி
March 30, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 36
MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

**பாவனைக்கு உதவாத டீசல்**

## தடுத்து வைக்கப்பட்ட கப்பல் விடுவிக்கப்பட்டது

- கீத்

நான்காயிரத்து ஐந்நூறு மெட்ரிக் தொன் டீசலுடன் திருமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள M.T. விலா என்னும்... 7

## பால்மாவில் விசம்??

இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களில் மனிதப் பாவனைக்கு ஒவ்வாத விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் கலந்திருக்கலாம் எனும் சந்தேசம் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகப் பல முறைப்பாடுகளை... 7

## யாத்திரிகர் பேரூந்தை மோதியது கொள்கலன் வண்டி

சேருநுவர புத்த கோயிலுக்கு யாத்திரை சென்றவர்களின் பேரூந்தை பாதையை விட்டு விலகிய கொள்கலன் வண்டியொன்று... 7

**மின்சாரக் கட்டண உயர்வு**

## அலகுக்கு 4 ரூபாவா?

மின்சார சபையின் செலவினை சுமார் நாற்பது மில்லியன் ரூபாவினால் குறைக்க முடிந்துள்ளதால் மின்சாரக் கட்டண உயர்ச்சியை பெருமளவு குறைக்க முடிந்துள்ளதாக... 7

# தமிழர்கள் முஸ்லிம்கள் என்னும் இரண்டினமல்ல நாம் தமிழ் பேசும் மக்கள் என்ற ஓரினமே!!



**– புல்மோட்டையில் இரா. சம்பந்தன்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டை அக்கட்சி மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். 7

# நிலக்கரி மின் உற்பத்தியால் வெப்பநிலை உயரும் அபாயம்

## – சம்பூரில் நிறுவப்பட்டால் திருமலையின் வெப்பநிலை மாறலாம் –

நிலக்கரி மின் உற்பத்தியை நிறுத்தாவிட்டால் உலக வெப்பநிலை மேலும் இரண்டு செல்சியஸ்கள் உயரும் அபாயம் இருப்பதாக தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுவளத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். 2030ல் உலகின் வெப்பநிலை இவ்வாறு உயர்வடையும் என உலகதினத்தை மகிந்தாராம விகாரையில் கொண்டாடிய போதே அவர் தெரிவித்துள்ளார்.

உலகில் மனித இனத்தின் இருப்பை தீர்மானிக்கும் முக்கிய தசாப்தமாக அடுத்துவரும் நூறு ஆண்டுகளே இருக்கப் போகின்றன என்றார் அவர். சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டால் திருமலையின் வெப்பநிலையும் உயர்வடையும் என்றே தெரிகின்றது. இதனால் கடுமையான சூழல் மாற்றங்கள் நிகழ்வதுடன் அவை பாதகமான விளைவுகளையே ஏற்படுத்துலாம்.

## பெரியகுளத்தில் இளைஞர்கள் இருவர் பலி



தப்பியவர்களில் இருவர்

திருமால்புர பெரியகுளத்தில் மீன்பிடிக்கச் சென்ற ஐந்து இளைஞர்களில் இருவர் படகு கவிழ்ந்த விபத்தில் பலியாகியுள்ளனர்.

றோயல் கொன்ஸ்ரக்சன் கம்பனியில் வேலை செய்யும் போர்டன் ஜென்ட், (வயது 32), ஜீவரதன் (வயது 29) ஆகிய இருவருமே அவர்கள். ஏனைய மூவரும் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர். மரணமான இருவரும் அண்மையிலேயே திருமணம் முடித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரை நாளில் வேலையை முடித்துக்கொண்டு குளத்துக்கு மீன்பிடிக்கச் சென்ற இவர்களின் மரணம் தொடர்பான விசாரணைகளை காவல்துறையினர் ஆரம்பித்துள்ளனர்.

## சம்பூர் நவரட்ணபுரம் கிராமத்தில் மீள்குடியேற்றம்

திருகோணமலை - சம்பூர் - நவரட்ணபுரம் மற்றும் சூனித்தீவு ஆகிய பகுதிகளில் 139 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் 25.03.2013ல் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதால் அங்கு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதாக 224வது படைப்பிரிவின் பேசவல்ல அதிகாரி தெரிவித்தார். குடியேற்றப்பட்ட மக்களுக்கு அங்கு தற்காலிக வீடுகளே அமைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலும் மக்கள் பாவனைக்கு அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதன் முதல் பூஜை அன்று காலை இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். 7

Started on March 18, 2013
Chartered Accountancy
Full Time Course
"To be the most sought after Professional Qualification for Business Leaders"
CAB - I Time Table: 9:00 - 12:00 Monday Tuesday & Wednesday Full Time
CAB - II Time Table: Saturday, Sunday & Poyaday Part Time

Veal Business College. No 159A, Sea View Road, Trincomalee. 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

வணக்கம் !

## அடிப்படை எண்ணங்களில் மாற்றம்!!!

இலங்கையில் இந்திய இராணுவம் அமைதிப்படையாக ஈழதேசமெங்கும் குவிக்கப்பட்டிருந்த காலத்தின் நிகழ்வொன்று ஞாபகத்திற்கு வந்தது.

சுற்றிவளைப்பொன்றில் நானும் எனது நண்பனும் தடுத்துவைக்கப்பட்டு நிலத்தில் இருத்தி வைக்கப பட்டிருந்தோம். அப்போது தான் பாடசாலை விட்டு வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது திடீரென மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு அது. பாடசாலைச் சீருடை என்பதால் சுமுகமான பார்வையினை எமக்கு முன்னிருந்த ஜவான் எங்கள் மீது வீசினான். பின்னர் சகஜமாகத் தமிழில் உரையாடத் தொடங்கி விட்டான்.

" நீங்கள் ஏன் தனிநாடு கேட்டுப் போராட வேண்டும். உங்களுக்குத் தான் தேங்காயும், தண்ணீரும் நிறையவே இருக்கின்றதே" என்றான் அந்தத் தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திய ஜவான்.

இதற்கு விளக்கம் கொடுத்து அவனியிலிருந்து அழிந்து போய்விட அக்கணத்தில் நானும் எனது நண்பனும் தயாராயில்லை. ஆகவே நாமும் அவன் சொல்வது சரிதான் எனத் தலையாட்டினோம்.

இங்குதான் அவர்களின் புரிதலைப் பற்றிய சந்தேகம் எனக்கு ஏற்படுகின்றது. சுதந்திரம் என்பது போதுமானளவு தண்ணீராகவும், தேங்காயாகவும் தான் அவனுக்குப் பட்டிருந்தது. ஏனெனில் அவனது நாட்டில் அவனுக்குத் தட்டுப்பாடு அவையிரண்டும் தான். ஆனால் எமக்கு??

நேற்று இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவருடன் உரையாடிய போது காந்தி பேசியதாக அத்தலைவர் சொன்னது "ஈழத் தமிழர்களின் நலன்களுக்காக காங்கிரஸ் கட்சியும் ஆட்சியும் எவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறது என்பதை விவரித்தார். குறிப்பாக, ஈழத் தமிழர்களின் மறுவாழ்விற்காக மத்திய அரசு 500 கோடி ஒதுக்கீடு செய்த போது அதை 1000 கோடியாக உயர்த்தியதை சொன்னார். இப்படி நிறைய நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அதனை தமிழர்கள் ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்?" என சோனியா தெரிவித்திருந்தார்.

இந்திய ஜவானுக்கு அவனது மட்டத்தில் தேங்காயும், தண்ணீரும் உள்ளதைப் போலவே சோனியா காந்தியின் மட்டத்தில் 500 கோடியிலுருந்து மறுவாழ்வுதவித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1000 கோடி அதிகரிக்கப்பட்டமை உள்ளதைப் புரிந்து கொள்வீர்கள் என நினைக்கின்றேன்.

அடிப்படையில் ஜவானினதும் சோனியா காந்தியினதும் மனங்களில் உள்ள எண்ணங்கள் ஒன்று தான்!

உரிமைப் போர் ஒன்றின் வெற்றியென்பது இன்று உலகத் தலைவர்களின் மன மாற்றங்களில் தான் தங்கியுள்ளது. ஆயுதங்களிலோ அல்லது யுத்தத் தந்திரோபாயங்களிலோ அல்ல. அம்மாற்றம் உள்நாட்டுத் தலைவர்களின் மனங்களில் நிகழ்ந்தாலும் 'சுதந்திர நாடொன்று உலகில் உருவாகும் என்பதற்குத் தென் சூடான் ஓர் உதாரணம்.

-ஆசிரியர்-

# இலங்கையில் தமிழர் தாக்கப்பட்டால் இந்திய அரசே அதற்குப் பொறுப்பு

**– அக்மீமன தயாரத்ன தேரர்**

தமிழ் நாட்டில் இலங்கைக்கு எதிரான தாங்குதல்களில் எதிர்வினையாக இலங்கையில் தமிழர்கள் தாக்கப்பட்டால் அதற்குப் பொறுப்பு இந்திய அரசே என்று சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் கூறியுள்ளார். ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இவர் இந்திய தாக்குதல்கள் அதன் பின்விளைவுகளால் இரு நாட்டு உறவிலும் விரிசலை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

புத்தர் பிறந்த புனித பூமியான இந்தியாவிற்கு பௌத்த மதத்-துறவிகளும் சிங்களவர்களும் சென்று-வரக்கூடாது என தடுப்பது எவ்வகையில் நியாயம் என அவர் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தியாவின் தமிழ்நாட்டுக்குச் செல்லும் இலங்கையின் பௌத்த பிக்குகளும், பௌத்தர்களும் தாக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்லாது, இலங்கையிலுள்ள சிங்களவர்கள் எவரும் தமிழ்நாட்டுக்கு வரக்கூடாது என்றும் அவர்கள் அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

இதை எப்படி நாம் ஏற்றுக்கொள்வது? புத்தர் பிறந்த புனித பூமிதான் இந்தியா. அங்கு சென்றுவருவதற்கு பௌத்தர்களுக்கு உரிமை உள்ளது. அதுமட்டுமல்லாது, இந்தியா என்பது எமது அயல் நட்பு நாடு.

வரலாற்றுக் காலம் முதல் உறவுகளைப் பேணும் நாடு. இந்தியாவுக்கு ஒரு தாக்கம் ஏற்பட்டால் அது எமக்கும் தாக்கத்தைச் செலுத்தும்.

தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிராக எழுகின்ற எதிர்ப்புகளால் இலங்கை இந்திய உறவில்தான் பாதிப்பு ஏற்படும். இதற்கு நாம் இடமளிக்க முடியாது. இலங்கை என்பது ஓர் இறைமையுள்ள நாடு.

எமக்கேற்ற வகையில்தான் நாம் இங்கு செயற்படவேண்டும். இருப்பினும், தமது ஏவல்களுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படும் தலையாட்டி பொம்மையாக எம்மை மாற்ற தமிழ்நாடு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில், யுத்தத்தின் பின்னர் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் அனைத்து சிறப்புரிமை-களுடனும் வாழ்கின்றனர். நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஐக்கியத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

எந்த மக்களையும் பாரபட்சத்துடன் அரசு நடத்தவில்லை. இவ்வாறான நிலையில், தமிழ்நாட்டிலுள்ளவர்கள் ஏன் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்?

இலங்கையின் பௌத்த பிக்குகளும், பௌத்தர்களும் தமிழ்நாட்டில் தாக்கப்படுவது தொடர்வதால், எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் கட்டவிழ்க்கப்பட்டால் அதற்கு இந்திய மத்திய அரசே முழுப் பொறுப்பேற்கவேண்டும்.

எனவே, எதிர்கால நலனையும், இலங்கை இந்திய நட்புறவையும கருத்திற்கொண்டு இலங்கைக்கு எதிரான தமிழ்நாட்டின் எதிர்ப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார் அக்மீமன தயாரத்ன தேரர்.

இதேவேளை, இது குறித்து சிங்கள அமைப்புகளின் ஒன்றியத்தின் உறுப்பினரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தவை வருமாறு:

இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட சூழ்ச்சியாகும். இலங்கையிலுள்ள தமிழர்கள் நலன் குறித்து தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குத் துளியளவும் அக்கறை இல்லை என்பதே அவர்களது நடவடிக்கை-களினூடாக வெளிப்படுகின்றது.

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் இங்கு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் அங்கு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடு-படுகின்றனர். எனவே, இதற்கு இந்திய மத்திய அரசு இடமளிக்கக்கூடாது.

தமிழ்நாட்டின் இலங்கை எதிர்ப்பு நடவடிக்கைகளை அது தடுத்து நிறுத்த வேண்டும் என்றார் அவர்.

## ஆசியமுரசு

### எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்கிறோம் நீங்கள் ஆயுதங்களை தாருங்கள்

**– நாகை மீனவர்கள் –**

மீன்பிடியில் ஈடுபடும்போது போராடிச் சாகும் முடிவை நாகை மீனவர்கள் எடுத்திருக்கின்றார்கள்.

அரசே... ஆயுதம் தாருங்கள் நாங்களே போராடிக் கொள்கிறோம் என அவர்கள் தமதுயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கி-யிருக்கின்றார்கள். அண்மையில் நாகை நம்பியார் நகர் மீனவர்கள் வாளால் வெட்டப்பட்ட சம்பவத்தால் தமிழக மீனவர்கள் தொடர் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு ஆயிரம் வேலைகள் இருக்கும் அதனால் எம்மைப் பாதுகாக்க அவர்களுக்கு நேரம் இருக்காது நாமே எம்மை பாதுகாத்துக் கொள்கின்றோம். ஆயுதம் மட்டும தந்தால் போதும் என அவர்கள் வேண்டுகோள் விட்டுள்ளனர்.

கெரள மீனவர்களை சுட்டுக்-கொன்ற இத்தாலிய படை மீது மத்திய அரசு எவ்வளவு நடவடிக்கைகளை எடுத்துள்ளது ஆனால் நாளாந்தம் நாம் இலங்கைக் கடற்படையால் சாகிறோம். அதற்கு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

### இலங்கைக்கெதிரான பிரேரணையின் வீரியத்தை இந்தியா குறைக்கவில்லை – பிளேக்

இலங்கைக்கு எதிரான ஜெனீவாப் பிரேரணை தொடர்பாக அமெரிக்கா இந்தியாவுடன் ஆரம்பம் முதலே மிக நெருக்கமான கலந்துரை-யாடல்களை மேற்கொண்டிருந்தது. என தெற்காசியாவிற்கான அமெரிக்கப் பிரதிநிதி ரொபேர்ட் பிளேக் தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடல்களின் போது பிரேரணையில் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களை தாம் வரவேற்றதாகவும் அம்மாற்றங்களு-டேனேயே பிரேரணை சமர்ப்பிக்கப்-பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்தியாவின் [illegible] இலங்கை தொடர்பான நடவடிக்கை-களை மேற்கொள்ளும் வழிமுறைக-ளுக்கே உலக நாடுகள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏனெனில் இலங்கைமீது இந்தியா அதீத செல்வாக்குச் செலுத்தும் ஆசிய நாடாகும் என



அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்க பிரேரணையின் முன்வரைவில் இருந்த கடுமையான தொனியை இந்தியாதான் குறைத்தது என்ற குற்றச்சாட்டை தான் மறுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டு சட்ட சபையில் தமிழர் ஆதரவுத் தீர்மானங்கள்

அ.தி.மு.க ஆட்சியல் தமிழக சட்ட சபையில் கடந்த சில நாட்களாக கடும் ஈழத்தமிழர் ஆதரவுத் தீமானங்கள் நிறைவேற்றப்பட்ட வண்ணம் உள்ளன. தற்போது நிறைவேற்றப்பட்டுள் தீர்மானங்கள் வருமாறு.

- இலங்கை நட்பு நாடு என்ற வாதத்தை இந்தியா கைவிட வேண்டும்
- தமிழ் ஈழம் அமைப்பது தொடர்பாக இலங்கைத் தமிழர் உட்பட பிரதேசத்தில் வாழும் தமிழமும்
- கச்சதீவை மீட்டு இந்தியா தன்வசப்படுத்த வேண்டும்
- இந்திய மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு கல்வி நடவடிக்கை-களுக்குத் திரும்ப வேண்டும்

### தமிழக முதலமைச்சருக்கு "லக்பல சேனா" எச்சரிக்கை

இலங்கையிலுள்ள இந்தியத் தமிழரை அழைத்துச் செல்லும் நிலை ஏற்படும் என தமிழக முதலமைச்சரை இலங்கையின் லக்பல சேனா அமைப்பு எச்சரித்திருப்பதாக இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக முதல்வருக்கு கச்சதீவு வேண்டுமானால் எடுத்துக்கொள்ளட்டும் ஆனால் அத்தீவுடன் சேர்த்து எட்டு லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்து மூன்று இந்தியத் தமிழர்கள் இலங்கையில் உள்ளனரே அவர்களையும் அழைத்துச் செல்லட்டும் என லக்பல சேனாவின் தலைவர் மருத்துவர் சுதத் மல்லிகாராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்தியத் தொழிலாளர் தேயிலைத் தோட்டங்களை விட்டுச் சென்றால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப தென் சீனாவிலிருந்தோ, வியட்நாம் அல்லது லாவோஸ்சில் இருந்தோ பௌத்த மதப் பெண்களை வேலைக்குக் கொண்டுவர முயற்சிக்கலாம் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய நடுத்தரத் தொழில் முயற்சிகளுக்கு ஐரோப்பிய வங்கியின் உதவி

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் மேம்பாட்டிற்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கியூடாக நிதியினைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐரோப்பிய முதலீட்டு வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டுடன் கூடிய தொழில் முயற்சிகளுக்கும் பச்சைவலுத் துறையில் ஈடுபடும் வியாபார அமைப்புக்களுக்கும் சுமார் 90 மில்லியன் யூரோக்களை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசதுறை முயற்சிகளுக்கும் இந்நிதி கிடைக்கவுள்ளது.

## பல மில்லியன் இழப்பில் ஸ்ரீலங்கன்

சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கையை விமானிகள் ஆரம்பித்திருப்பதால் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பல மில்லியன் நட்டத்தை எதிர்கொள்வதாக தகவல்கள் கசிந்துள்ளன.

பயிற்சி விமானிகளைச் சேவைக்கு இணைப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் வெட்டுப்புள்ளியைக் குறைத்து ஏதோவோர் அழுத்தத்தில் மேலும் இரு விமானிகளை பயிற்சியாளர்களாக ஸ்ரீலங்கன் இணைத்திருந்தது.

இதனை வன்மையாக எதிர்த்த விமானிகள் தமது எதிர்ப்பைச் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கை ஊடாக வெளிக்காட்டி வருகின்றனர். இதனைச் சேவைகள் இரத்தாவதுடன், காலதாமதமாகியும் வருகின்றமையால் நாளாந்தம் பல மில்லியன் நட்டத்தை ஸ்ரீலங்கன் எதிர்கொள்வதாக தெரியவருகின்றது.

## தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டனர்!!!

**– காவல்துறை அதிபர் –**

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியைப் பார்வையிடச் சென்ற முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் அந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் காவல்துறை மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் மற்றும் பொய்ப்பிரச்சார நடவடிக்கைகளையிட்டு யாரும் பயப்படத் தேவையில்லை என காவல்துறை மா அதிபர் தெரிவித்துள்ளனர். அத்துடன் சுமுகமான மனநிலையில் கண்காட்சியை முஸ்லிம்கள் பார்வையிடும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## கலவரத்தை தூண்டும் குறும் செய்திகளுக்குத் தண்டனை

மக்களிடையே இன மற்றும் மத வாதங்களைத் தூண்டும் செய்திகளை அனுப்பிய இருவர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து அவ்வாறான செய்திப் பரிமாற்றங்களில் ஈடுபடுவோரை தண்டனைக்குட்படுத்தப் போவதாக காவல்துறை அறிவித்துள்ளது.

புதிய தொழிநுட்பம் ஊடாக இவ்வகைக் குறுஞ்செய்திகளை ஒட்டுக்கேட்டும் வேலைத்திட்டமொன்றை நாடளாவிய அடிப்படையில் காவல்துறை முன்னெடுக்கவுள்ளது.

தேசமுரசு

# பொதுநலவாய மகாநாடு மொரிசியஸ்சிலா?



இலங்கையில் இவ் வருடம் நடைபெறவிருந்த பொதுநலவாயத் தலைவர்களின் மகாநாடு திரிசங்கு சொர்க்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இம் மகாநாட்டிற்கு வருகை தருவதில்லை என்ற முடிவை எலிசபெத் மகா ராணி மேற்கொண்டுவிட்டதாக ஐக்கிய இராச்சியப் பொதுநலவாய அலுவலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதாக ஐக்கிய இராச்சியத்தின் சண்டே கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் இச் செய்தி வெளியானதைத் தொடர்ந்து பக்ஹிங்ஹாம் அரச மாளிகையின் செய்திப் பிரிவின் அலுவர் ஒருவர் பொதுநலவாய மகாநாட்டில் பங்கு-பற்றுவது தொடர்பான இறுதி முடிவினை ஐக்கிய இராச்சியத்தின் மகா இராணி தற்போது வரை மேற்கொள்ளவில்லை என தெரிவித்து-ள்ளார். அரச மாளிகையின் செய்திப் பிரிவானது அரச முக்கியஸ்-தவர்களின் பயணங்கள் தொடர்பான தகவல்களை அப் பயணங்களுக்கு அண்மித்த நாட்களிலேயே வெளியிடுமேயொழிய பல நாட்களுக்கு முன்னர் இப் பயண விடயங்களை வெளியிடாதெனவும் தெரிவித்துள்ளார்.

கனடா ஏற்கனவே தான் கலந்துகொள்ளப்போவதில்லை என்ற முடிவை வெளியிட்டுள்ளதாகவும் தற்போது ஐக்கிய இராச்சிய மகாராணியின் முடிவால் மேலும் பல நாடுகள் இலங்கைக்கு வரும் முடிவை மீள்பரிசீலனை செய்யலாம் எனவும் செய்தி வெளியாகியுள்ளது. இச் செய்திகளின் பின்புலத்தில் மகாநாடு மொரிசியஸ் நாட்டிற்கு மாற்றப்படலாம் எனவும் தெரியவருகின்றது. இந்தியாவை இம் மகாநாட்டைப் புறக்கணிக்கும்படி தமிழ்நாட்டின் இரு முக்கிய கட்சிகளும் நெருக்கடி கொடுத்துவருகின்றன.

## மயிரிழையில் தப்பியது மத்தளவில் இருந்து புறப்பட்ட விமானம்

மத்தள ராஜபக்ச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை விமானமொன்றை பறவைக் கூட்டம் மொய்த்ததால் அவ் விமானம் சேதமடைந்த நிலையில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் முன்பக்கக் கண்ணாடியில் சேதம் ஏற்பட்டதைத்



தொடர்ந்து விமானம் விபத்தடையும் கடுமையான நிலையை எதிர்கொண்டிருந்தது. சுமார் நாற்பது பயணிகள் அந்நேரத்தில் விமானத்தில் பயணித்திருந்தனர். மத்தள விமான நிலையத்தைச் சூழவுள்ள பிரதேசம் காட்டுப் பிரதேசமாக இருப்பதால் பறவைகள் கூட்டமாக வாழுமிடமாக இருப்பதுடன் விமான இரைச்சலைக் கேட்டவுடன் கலைந்து கும்பலாக பறந்து விமானப் பாதையை தடை செய்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான ஓர் நிலைமை மத்தள விமான நிலையத் திறப்பு நாளுக்கு முதல்நாள் பரீட்சார்த்த விமானத் தரையிறக்கத்தின் போதும் விமானமொன்று எதிர்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## – துலங்குமா மர்மம் –

### "மாத்தளை மனிதச் சடலங்கள் 1986 – 1990 காலங்களில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டவையே" – நீதவான்

மாத்தளை மனிதப்புதைகுழியுள் கொலையாகிப் புதையுண்ட மனிதர்கள் 1986 - 90 காலப்பகுதியிலேயே கொல்லப்பட்டுள்ளனர் எனும் தகவல்களை விசாரணை அறிக்கைகள் தருவதாக மாத்தளை நீதவான் தெரிவித்துள்ளார்.

இவ்விரு அறிக்கைகளும் முறையே களிணிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினாலும் மாத்தளை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி அஜித் ஜெயசேன் அவர்களாலும் நீதிமன்றுக்கு சமர்ப்பித்திருந்தனர்.

1986 - 96 காலப்பகுதியில் உள்நாட்டில் ஜே.வி.பியினரே யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது அக் காலப்பகுதியில் பல்லாயிரக் கணக்கானோர் காணாமற் போயிருந்ததும் நினைவுகூறத்தக்கது

## ஆளி ஆசையில் மேலும் 15பேர் திருமலையில் கைது!

சட்விரோத முறையில் அவுஸ்திரேலியாவிற்குச் செல்லும் நோக்குடன் விடுதியொன்றில் தங்கியிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 15 பேரை திருமலைக் காவல்துறை கைது செய்துள்ளது.

இவர்களில் 2 குழந்தைகளும் நான்கு பெண்களும் அடங்கியிருந்-ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண சபைத் தேர்தல் நவம்பரில் – அரசு தேர்தலை நடாத்த முடியாது – ஆணையாளர்

வட மாகாண சபைக்கான தேர்தலை எதிர்வரும் நவம்பரில் நடாத்த முடியும் என அரசு திட்டமிட்டுவரும் வேலையில் அவ்வாறு நடாத்துவதற்கான அடிப்படை வேலைகள் எவற்றையும் தம்மால் தற்போதைக்கு முன்னெடுக்க முடியாதுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபை பிரிக்கப்பட்டு தனி மாகாண சபையாக உருவாக்கப்பட்டதுடன் அதற்கான தேர்தலை நடாத்தும் வர்த்தமான அறிவித்தலை சனாதிபதி இன்னமும் வெளியிடாமையாலேயே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் தேர்தலை நடாத்த வேண்டுமாயின் மே மாத முடிவிற்குள் இவ் வர்த்தமானி அறிவிப்பு வெளியாக வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்சியிலிருந்து நாமே விலகிவிட்டோம் – பிரதீப் மாஸ்டர்–

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலிருந்து அவர்கள் எம்மை நீக்க முன்னரே நாமாகவே விலகிக் கொண்டோம் என அக் கட்சியின் உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

இக் கட்சியிலிருந்து இவரையும் அவரது சகோதரர் ஒரு கைலேஸ்வர ராஜாவையும் உறுப்புரிமை நீக்கம் செய்துள்ளதாக கடந்த வாரம் அக்கட்சி அறிவித்ததைத் தொடர்ந்தே திரு. பிரதீப் மாஸ்டரால் இச் செய்தி விடுக்கப்-பட்டுள்ளது.

தொடர்ந்தும் தமது அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ள அவர்களிருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து முன்னெடுக்க-வுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## "தேசத்திற்கு மகுடம்" 39 மில்லியன் மோசடி

அம்பாறையில் நிகழ்ந்துவரும் "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சிக்கான ஒப்பந்த வேலைகளில் சுமார் 39 மில்லியன் ரூபாய்கள் மோசடி நிகழ்ந்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இக் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் துறையினர் ஆரம்பித்துள்ளனர். தொலைத்தொடர்பு தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமையவே "தேசத்திற்கு மகுடம்" செயலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 230 தற்காலிக மலசல கூடங்களையும், சிற்றுண்டிச் சாலைகளையும் அமைக்கும் ஒப்பந்தங்களின் போதே இப் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## – விபரீதக் காதல் –

**தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரும், சிறுமி ஒருவளும் சடலங்கள்**

மின்னேரியாவின் ரொட்டவெவ பிரதேசத்தில் தூக்கிலிட்டு தற்கொலை செய்துகொண்டதாக சந்தேகிக்கப்படும் இருபத்தெட்டு வயதான ஆண் இனதும், பதினேழு வயதான சிறுமியினதும் சடலங்களை காவல்துறை மீட்டுள்ளது.

**சென்ற வாரம்...**
அவர்கள் பேசிக்கொண்டு இருப்பதையும், பாடிக்கொண்டு இருப்பதையும் கேட்கவும் செய்தனர், காணவும் செய்தனர். அதுவும் ஆலையாள் மாறிமாறிப் பாடும்போது கேட்கக் காதுகள் கோடி வேண்டும் போல இருக்கும்

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 9

## வரலாற்று நாவல்

மத்தியமாவதி, அடானா, ஆரபி, பைரவி, தேசிகம், செஞ்சுருட்டி, சுருட்டி, மோகனம், காம்போதி, ஆனந்தபைரவி போன்ற மோகர்த்தா ராகங்களையும் ஜன்னிய ராகங்களையும், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று கீர்த்தனைகளையும் பாடி மகிழ்ந்தனர்.

இவர்களை அறியாமல் இவர்களது பாட்டுக்கு செவி கொடுத்தவர்கள் நாதஸ்வரக்காரரின் மகள் நல்ல பொருத்தமான ஜோடியைத்தான் தெரிந்திருக்கிறாள் என்றார்கள். பிடித்தாலும் புளியம் கொம்பாகத்தான் பிடித்திருக்கிறாள் என்றார்கள். இந்தப் பேச்சுக்கள் வைத்திலிங்கம் பிள்ளையின் காதிலும் விழத் தொடங்கின.

ரங்கநாயகி குடமுருட்டியாறு வெண்மணற்பரப்பில் கோட்டை வாலிபனுடன் பாடிமகிழ்ந்து விட்டு வீட்டுக்கு வந்தாள். திண்ணையில் இருந்து எங்கோ பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்த வைத்திலிங்கம் பிள்ளை மகளிடம் சற்று கடுமையாகவே கேட்டார். நான் கேள்விப்படுவதெல்லாம் உண்மையா? அவளில் தயக்கமோ சுணக்கமோ இருக்கவில்லை. ஆம் அப்பா! அவர் என் ரசிகர், சங்கீத ஞானமுள்ளவர். ராகங்களை நன்றாகப் பாடவும் செய்கிறார். அவர் மறித்தார். அவர் ராகம் பாடுவது இருக்கட்டும். அவர் யார் என்றாவது அறிந்து கொண்டாயா? ஆம் அப்பா. அவர் பக்கத்தில் உள்ள தம்பன் கோட்டை வீரர்களில் ஒருவராம். சங்கீதம் கற்றுக் கொள்ளும் ஆசை இருக்கிறது. ராகங்களை சுமாராகப் பாடுகிறார். பெயர்கூட குமரன் என்றும் சொன்னார். உங்களைச் சந்திக்க வேண்டும் என்றும் சொன்னார். உங்களை சந்திக்க அனுமதியுண்டா அப்பா? அவனது பெயரைச் சொல்ல அவள் காட்டிய தயக்கத்தைக் கண்டு தூரத்துப் பார்வையை வெட்டிவிட்டு அவளை உற்று நோக்கினார். அவளது பருவத்து ஞானத்திலும் குழந்தைத்தனம் விட்டுப்போகாததைக் கண்டு மனதுக்குள் சிரித்துக்கொண்டார் வைத்திலிங்கம் பிள்ளை. வேண்டாம்... வேண்டாம்... அவரை இங்கு அழைத்து வந்து விடாதே... அவர் அவசரம் காட்டினார்.

ஊர் ஏதேதோ பேசுகிறது. அந்த வாலிபரைப்பற்றி நீ அறிந்து கொண்டதாகச் சொன்னதில் அரைப்பகுதிதான் உண்மை... அவர் கோட்டையில் சாதாரண வீரரல்லம்மா... அவர்தான் தம்பன் கோட்டைக்கான புதிய தளபதி... பெயரும் வெறும் குமரனல்ல, உதயகுமாரன். எல்லாவற்றையும் விட கலிங்க விஜயபாகு பேரரசரது பட்டத்து தேவியின் மூத்த சகோதரியின் மகன். அரச குலத்தவன்...

அவர் பேசப் பேச அவள் அதிர்ந்து போனாள். ஒரே குழப்பமாக இருந்தது.... அப்பா ஏதோ தவறான விடயத்தை அறிந்திருக்கிறார் என்று எண்ணியவள், அதே குழப்பத்தைக் குரலிலும் காட்டி கோட்டை தளபதியின் பெயர் தம்பன் என்றல்லவா முன்பு எனக்குச் சொல்லியிருக்கிறார்கள் என்றாள்.

மகளின் குழப்பத்தைக் கண்டு பரிதாபப்பட்ட அவர் ஆறுதலாகச் சொன்னார். ஆம் அம்மா, மகா வீரரான தளபதி தம்பரை வாத நோய்தாக்கி படுக்கையில் சாய்த்துவிட்டது. நோய் குணமாக வேண்டி தளபதி தன் தாயகமான கேரளம் சென்றிருக்கிறார். சக்கரவர்த்திதான் இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுத்ததும். அவரே தளபதியின் இடத்திற்கு தன் ராணியின் மூத்தசகோதரியின் மகன் உதயகுமரனை அனுப்பியும் புதிய தளபதியாக பதவியேற்கவும் வைத்திருக்கின்றார்.

புதிய தளபதி கோட்டை பொறுப்பை ஏற்கும் வைபவத்தில் உன் அண்ணாதான் நாதஸ்வரம் வாசித்தான். மனம் விரும்பவில்லைதான் நானும்...... அந்த வைபவத்திற்கு கொஞ்சநேரம் போயிருந்தேன். புதிய தளபதியை நானும் கண்டேன். வெண்புரவி ஏறிவரும் அவரின் தோற்றம் பார்க்க ஆசையாக இருந்தது. அவர்தான் குடமுருட்டியாறு ஆற்றங்கரையில் உன்னைச் சந்தித்தாக என்னிடம் சொல்லியி-ருக்கிறார்கள். நாதஸ்வரக்காரரே உங்கள் மகள் நல்ல புளியங்கொம்பைத்தான் பிடித்திருக்கிறாள், என்று அவர்கள் கூறுவது ஒன்றும் மகிழ்ச்சி தரக்கூடியதில்லை. அவளது கண்களை உற்றுப்பார்த்துச் சொன்னார்.

அம்மா நாம் சாதாரண குடிமக்கள். தளபதி உதயகுமரன் அரசகுலத்தவர். எட்ட நினைத்தாலும் கிட்டாத தூரம்.... அரச குலத்தவர் ஒருபோதும் வேறு இனங்களில் பெண் கொள்வதில்லை. அதற்கு இடமுமில்லை என்று நான் அறிவேன்.

அவளில் தெரியும் ஏக்கத்தின் சாயலைக் கண்டு கழிவிரக்கப்பட்ட அவர், நாடுகடத்தப்பட்டு இந்த நாட்டில் ஒரு அந்நியனாக வந்து இறங்கிய விஜயனுக்கு இந்த நாட்டில் ஏக சக்கரவர்த்தியாகவர பேருதவி நல்கிய இயக்கர் குலக்கொடியான குவேனிக்கு விஜயன் தொடர்பாக பிள்ளைகள் இருந்தும், குவேனியையும் பிள்ளை-களையும் கைவிட்டுவிட்டு விஜயன் பாண்டிய ராஜகுமாரியை மணந்து கொண்டவரலாற்றையும் கருத்தில் எடுத்து, நீ தெளிவு பெறவேண்டும். நம்முடைய நிலமைக்கு மேற்-பட்டவர்களுடன் உறவு கொள்வது மகிழ்ச்சி தரக்கூடியதில்லை. சர்வஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும் என்றார்.

இதைவிட மேலான அறிவுரையை அவரால் கூறமுடியாது என்றே அவருக்குப்பட்டது. கவலையின் ரேகைகள் அவர் முகத்தில் கீறல்போட்டு, அவர் வயதை கூட்டிக்காட்டின. அவர் நிலை இப்படியென்றால் அவளோ.. குடமுருட்டியாற்றங்கரையில் தன்னைச் சந்தித்தவர் சாதாரண வீரர் அல்ல, அவர்தான் தம்பன் கோட்டைப் புதிய தளபதி, கலிங்க விஜயபாகு சக்கரவர்த்திக்கு நெருங்கிய உறவினர் என்று தந்தை சொல்லக் கேட்கக் கேட்க பேதைமனம் துயரம்... பயம்... ஏமாற்றம்.... மகிழ்ச்சி... போன்ற உணர்ச்சிகளால் கதிகலங்கிப் போனது.

தொடரும்...




# வரலாற்றில் திருக்கோணமலையல்ல: திருகோணமலையே வாழும்...

மகாசேனன் ஆட்சிக்காலம் கி.பி 3ம் (275-301)நூற்றாண்டு. எனவே அக்காலத்தில் கோகர்ணம் என்பதே திருகோமலையின் பெயராக இருந்திருக்கிறது. இதையே மகாவம்சம் "கோகண்ண" எனக் குறிப்பிடுகிறது. இந்தியாவில் உள்ள திருக்கோகர்ணம் என்ற சிவதலத்திலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம் என்பது செ.குணசிங்கம் குறிப்பிடுகிறார்.

அடுத்த குறிப்பு "வாயுபுராணத்தில்" வருகின்ற குறிப்பில் திருகோணமலை "கோகர்ணம்" என்றே குறிப்பிடப்-படுகிறது. "இந்தத் தீவின் கிழக்குக் கரையில் கோகர்ணம் எனப்பெயர்-கொண்ட சங்கரருக்கான பெரிய கோவில் ஒன்று இருக்கின்றது". இதில் குறிப்பிடப்படும் "கோகர்ணம்" கோணேஸ்வரமே. வாயுபுராணம் அதன் இறுதிவடிவத்தை அடைந்தது கி.பி 4ம் நூற்றாண்டு அல்லது கி.பி5ம் நூற்றாண்டு. "சூளவம்சத்தில்" உள்ள ஒரு கதையில்கூட திருக்கோணமலைப் பிரதேசம் "கோகர்ணம்" என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. அடுத்ததாக கி.பி 5ம் நூற்றாண்டு வரை திருகோணமலையும் கோணேஸ்வரமும் "கோகர்ணம்" என்றே அழைக்கப்-பட்டிருக்கிறது.

இதற்கு அடுத்ததாகத்தான் மிகப்பிரபலமான திருஞானசம்பந்த-ருடைய தேவாரம் கோணேஸ்வரத்தின் மீது பாடப்படுகிறது. அதிலே அவர் கோணேஸ்வரத்தை "கோணமாமலை" என்றே குறிப்பிடுகிறார். திருஞான சம்பந்தரின் காலம் கி.பி 7ம் நூற்றாண்டு. எனவே கொணேஸ்வரத்தின் பெயர் கி.பி 5ம் நூற்றாண்டிற்கும் கி.பி 7ம் நூற்றாண்டிற்கும் இடையில் "கோணமாமலை" என்று வழங்கத் தொடங்கியிருக்கிறது. திருஞானசம்பந்தர் தேவாரத்தின் பத்து பாடல்களிலும் "கோணமாமலை" என்றே குறிப்பிடப்-படுகிறது. கோணமலை என்றல்ல. ஏனெனில் அவர் துளுவ நாட்டிலுள்ள திருக்கோகர்ணத்தை "கோகர்ணம்" என்றே குறிப்பிடுகிறார்.

கி.பி. 7ம் நூற்றாண்டுவரை திருகோணமலையின் பெயரில் "திரு" ஒட்டவில்லை. தமிழகத்தில் எழுச்சி பெற்ற சைவ,வைணவ பக்தி இயக்கங்களின் செல்வாக்கினால் தேவாரங்களிலும், திவ்விய பிரபந்தத்திலும் பாடல்பெற்ற சைவ, வைணவத் தலங்களுடன் அவற்றின் புனிதத் தன்மையைக் குறிக்க "திரு"சேர்த்துக் கொள்ளப்படத் தொடங்கியிருக்கலாம். இதுவரையான சான்றுகளின் படி திருகொணமலையின் பெயர் திருக்கோணேஸ்வரத்தை மையப்படுத்திய அமைந்துள்ளதை கவனிக்க.

இதற்கு அடுத்ததாக கிடைக்கும் சான்றுகள் மிகமுக்கியமானவை. ஏனைய சான்றுகளைப் போல அல்லாமல் இச்சான்றுகள் வலுவானவை. ஏனெனில் அவை கல்வெட்டுச் சான்றுகளாகும். தவிர கோணேசர் ஆலயத்தையும் அது அமைந்துள்ள ஊரையும் தனித்தனியாகக் குறிப்பிடும் முதல் வரலாற்றுச் சான்றுகளாக இவை உள்ளன. திருகோணமலையில் கண்டெடுக்கப்பட்ட மானாங்கேணிக் கல்வெட்டும், நிலாவெளிக்கல்வெட்டுமே அவை. இவை இரண்டாம் சோழர் ஆட்சிக்குரியவை. இவை தொடர்பில் கலாநிதி. செ. குணசிங்கம் அவர்களும் பேராசிரியர்.சி.பத்மநாதன் அவர்களும் விரிவான ஆராய்ச்சிகளை செய்துள்ளனர்.

மானாங்கேணிக் கல்வெட்டு கி.பி 11ம் நூற்றாண்டில் சோழரின் பிரதிநிதியாக இலங்கையில் ஆட்சி செலுத்திய "சோழஇலங்கேஸ்வர-னுடையர்" ஆகும் சோழஇலங்-கேஸ்வரன் 1023 ல் பட்டமேறினான் என்பதை பேராசிரியர் சி. பத்மநாதன் மிக்கபுலமையுடன் சான்றுப்-படுத்தியுள்ளார்.

அடுத்ததாக இக்கல்வெட்டு 11ம் நூற்றாண்டுக்குரியதாகும். பெரும்பாலும் சிதிலமடைந்த இக்கல்வெட்டை கலாநிதி செ.குணசிங்கம் பிரதியெடுத்து வாசித்துள்ளார். இதனை ஒட்டி பேராசிரியர்.சி.பத்மநாதனும் "லங்கைத் தமிழ்ச் சாசனங்கள்" என்ற நூலில் இக் கல்வெட்டு தொடர்பான விரிவானக குறிப்புக்களை வழங்கியுள்ளார்.8 திருகோணமலை வரலாற்றாளர் கலாநிதி.க.சரவணபவனும் தமது "வரலாற்றுத் திருகோணமலை" நூலில் இதுபற்றிய குறிப்புகளை வழங்கி-யுள்ளார். செ. குணசிங்கம் அவர்கள் வாசித்த அக்கல்வெட்டின் வாசகம் வருமாறு க. சரவணபவன் தனது வரலாற்று திருகோணமலை நூலில் குறிப்பிட்டுள்ளார். (அடிக்குறிப்பில் செ.குணசிங்கம் அவர்களது கட்டுரை குறிக்கப்பட்டுள்ள)

... ஸ்ரீ சோழ இல ...
... தேவற்கு யாண் ...
... டு சொழ மண்டெ ...
... ந்த்ர சோழ வள ...
... சோழ வளநா ...
... மலை ஸ்ரீ மச்சு ...
... மூலஸ்தானமு ...
... வர முடையார் ...
... ள மண்டலத்தி...

சிதைந்த எழுத்துக்கள் இட்டு நிரப்பி திருத்தி எழுதப்பட்ட வாசகம்

ரான உடையார் ஸ்ரீ சோழ
இலங்கேஸ்
வரதேவற்கு யாண்டெட்டாவது
மும்முடி சோழ மண்டலத்து
இராஜேந்திர சோழவளநாட்டு கோண
மாமலை ஸ்ரீ மச்சுகேஸ்வரம்
ரமுடையார் மூலஸ்தானமும்
ஸ்வரமுடையார் கோயிலும்
சோழ மண்டலத்து இராஜே
ந்த்ரசிங்க வளநாட்டு இன்னம்
பர் நாட்டு
வேளான் கணபதி.

மேற்குறித்த வாசகங்களை பேராசியர். சி. பத்மநாதனும் உறுதிப்படுத்தியுள்ளார். ஆயினும் வாசகத்தின் 6வது வரியில் வரும் "மலை மச்சு(கேஸ்வர)" என்பது கோணேசர் கோவிலைக் குறிக்கிறது. மச்சகேஸ்வரம் கோணேசர் கொயிலின் பெயர்களில் ஒன்று. இது தொடர்பான விளக்கம் தட்சின கைலா புராணத்தின் மச்சாவதாரச் சருக்கத்தில் காணப்-படுகிறதாக குறிப்பிடப்-படப்படுகிறது. இக்கல்வெட்டில் "மலை" என்பது கொணேசர் கோவில் இருக்கும் திருகோண-மலையைக் குறிக்கிறது. "மச்சகேஸ்வரம்" என்பதே கோணேசர் கோவிலைக் குறிக்கிறது.

(இன்னும் நடுவோம்)

சத்தியன்

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்
குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி என்
1929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வலம்

## தாக்குதல் நடத்த தயாராகும் வடகொரியா



அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த பீரங்கி படை, ராக்கெட்டுகளை தயார் நிலையில் வைக்க வடகொரியா அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

வடகொரியா சமீபகாலமாக உலக நாடுகளின் எதிர்ப்புகளை மீறி அணு ஆயுத ஏவுகணை சோதனை, ராக்கெட் ஏவுதல் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 3வது அணு குண்டை வெடித்து சோதனை நடத்தியதால் வடகொரியாவுக்கு உதவிபுரியும் நிதி நிறுவனங்களை அமெரிக்கா முடக்கி வருகிறது. இந்நிலையில் அமெரிக்காவும், தென்கொரியாவும் இம்மாதம் தொடக்கத்தில் இருந்து தீவிர ராணுவ போர் ஒத்திகை நடத்தி வருகின்றன. இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறது.

இதனால் அமெரிக்கா மற்றும் தென்கொரியா மீது விரைவில் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா ராணுவம் மிரட்டல் விடுத்துள்ளது. அத்துடன் போட்டியாக போர் ஒத்திகையையும் நடத்தி வருவதுடன் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் யூன் கடந்த சில வாரமாக அங்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு நடத்தி வருகிறார்

## மார்பகத்தை இன்சூரன்ஸ் செய்யும் ஹாலிவுட் நடிகை

அமெரிக்காவைச் சேர்ந்த, ஹாலிவுட் நடிகை ஜெனீபர் லவ்ஹெவிட் தனது மார்பகங்களை மிக அதிக தொகைக்கு இன்சூரன்சு செய்யப் போவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதை ஒப்புக்கொண்ட அவர் தனது மார்பகங்களை 5 மில்லியன் டொலருக்கு (ரூ. 27 கோடி) இன்சூரன்சு செய்யப் போகிறேன் என்றார். சிலர் குறைந்த தொகைக்கு இன்சூரன்சு கேட்டார்கள். அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை என்று பெருமையுடனும் தெரிவித்தார்.

இதற்கு முன்பு நடிகை ஜெனீபர் லோபஸ்தான் மிக பெரிய தொகைக்கு தனது மார்பகங்களை இன்சூரன்சு செய்துள்ளார். அதேபோல போலி பார்டான் என்ற மற்றொரு நடிகையும் தனது மார்பகங்களை தலா 3 லட்சம் டொலர்களுக்கு இன்சூரன்ஸ் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




## செயல்பட துவங்கியது "கியூரியாசிட்டி" விண்கலம்

ஒருவாரம் செயல்படாமல் இருந்த, "கியூரியாசிட்டி" விண்கலம் மீண்டும் செயல்பட துவங்கியுள்ளது. செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்கான சூழல் உள்ளதா என்பதை கண்டறிய, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான, "நாசா' கடந்த, 2011ம் ஆண்டு, "கியூரியாசிட்டி' விண்கலத்தை, அனுப்பியது.

கடந்த ஆண்டு, ஆகஸ்ட் மாதம், செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கிய இவ் விண்கலம், பல்வேறு சோதனைகளில் ஈடுபட்டுள்ளது. அங்குள்ள பாறையில், துளையிட்டு அதன் துகள்களை ஆராய்ந்து வந்தது.

இந்நிலையில், கணனியில் ஏற்பட்ட கோளாறினால், கடந்த, 17ம் தேதி முதல், கியூரியாசிட்டியின் செயல்பாடு நின்று போனது.சீரமைப்பு பணிக்கு பின், கியூரியாசிட்டி தற்போது, மீண்டும் செயல்பட துவங்கியுள்ளது.

## குற்றத்தடுப்பில் ஸ்டெல்த் ரக விமானங்கள்

அணுஆயுத இயலுமையைக் கொண்ட இரு அமெரிக்க ஸ்டெல்த ரக விமானங்கள் தென்கொரிய வான்பரப்பில் பறக்கவிடப்பட்டுள்ளன.

அமெரிக்காவிற்கும், தென்கொரியாவிற்கும் எதிராக யுத்த முனைப்பினைக் காட்டிவரும் வடகொரியா அண்மையில் அணு-வாயுதப் போரைத் தொடுக்கும் முடிவினையும் தாம் எடுத்விட்டதாகக் கதைகளைக் கிளப்பிவிட்டதிலிருந்து கொரிய தீபகற்பம் யுத்தக் கொதி-நிலையை எட்டியுள்ளது. தென் கொரியாவுடனான தனது இறதித் தொலைத் தொடர்பு இணைப்பையும் கடந்த வாரம் தென் கொரியா கத்தரித்திருந்தது. இவ்விரு விமானங்களும் சுமார் 20000 கிலோமீற்றர் வரையான பறப்பினை ஒரே தடவையில் முடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் மிசூரி இராணுவ வான் தளத்திலிருந்து புறப்பட்ட இந்த பி2 வகை தாக்குதல் விமானங்கள் கொரிய தீபகற்பத்தின் மீது பறந்து திரும்பவும் அமெரிக்க வான் நிலையத்தை வந்தடைந்துள்ளன.

## மலேசியக் கடற்பரப்பில் சீனக் கடற்படை

தன்னிடமுள்ள மிகச் சக்திவாய்ந்த கடற்கலங்கள் சிலவற்றை மலேசியாவின் கிழக்குக் கடற்பரப்பில் நிறத்தப்பட்டுள்ளதாகச் சீனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்சீனக் கடற்பகுதியில் தனது உரிமையை நிலைநாட்டுவதற்காக இராணுவ வல்லாதிக்கத்தை பயன்படுத்திவரும் சீனா அதற்கமையத் தனது கடற்படைக் கலங்களை இக் கடற்பரப்பில் நிறுத்தியுள்ளதாக ஹொங்கொங் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்கா தற்காலத்தில் தனது கடற்படையின் கணிசமான அளவைக் கிழக்காசியக் கடற்பிரதேசத்திற்கு அனுப்பிவரும் அமெரிக்கச் செயற்பாட்டிற்கான பதிலடியாகவும் இதனைக் கருத முடியும் என அல்ஜசீராவின் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 08

பிரதீபா

1. பின்வரும் இலை வகைகளிடையே எண்ணெய் பெற உதவும் இலைவகை எது? 1. மிளகு இலை 2. ராபு இலை 3. கறுவா இலை
2. பௌத்த மதத்தினர் புனித மரமாக கருதி வழிபடும் வெள்ளரசுமரம் காணப்படும் புராதன நகரம் எது? 1. மிருந்தலை 2. தம்புள்ள 3. கண்டி
3. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டி, சைக்கிள் ரியூப் போன்ற பொருட்களை கொள்வனவு செய்யும் போது, அவற்றின் தரத்தை எவ்வாறு அறியலாம்? 1. ISO சான்றிதழ் 2. ISBN சான்றிதழ் 3. SLS சான்றிதழ்
4. மனிதருக்கும், பயிருக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு கிராமப் புறங்களில் பயன்படுத்தப்படும் தாவரம் எது?
   1. ஆமணக்கு 2. வேம்பு 3. கீழ்க்காய் நெல்லி
5. உணவு உண்ணும் வேளை கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பழக்கவழக்கம் எது? 1. வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உண்ணுதல்
   2. உடன் உணவு வகைகளை உண்ணுதல்
   3. உணவை மெல்லாது விரைவாக விழுங்குதல்.
6. "சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது" என்பதன் கருத்து என்ன?
   1. சூடு அதிகமுள்ள இடங்களை பூனை விரும்புவதில்லை
   2. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்
   3. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.
7. இலங்கையின் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவு கோதுமை பயிரிடப்படுவதால், கோதுமை மாவின் விலை குறைவடையும். இக்கூற்று பிழையானது இதற்குக் காரணம்?
   1. கோதுமை மாவின் விலை அதிகரித்துச் செல்லும்
   2. கோதுமை மாவின் விலையை குறைக்க முடியாது
   3. இலங்கையில் கோதுமையை பயிரிடமுடியாது
8. உயிர்கள் தூங்கும் இரவில்
   உலகை காவல் காக்க
   உயர்ந்த வானில் தோன்றி
   உலவும் விடியும் வரை

   இப்பாடலில் எதைப்பற்றி விவரிக்கப்படுகிறது?
   1. சூரியன் 2. சந்திரன் 3. இரவு
9. புத்தகமொன்றில் எப்போதும் இருப்பவை
   1. எழுத்து, சொற்கள், பக்கம் 2. எழுத்து, இலக்கம், படம்
   3. எழுத்து, பக்கம், கருத்து
10. "எனது கிராமத்திலுள்ள அனைவரும் மிக உயரமானவர்கள். விமலா உயரமானவள். எனின், விமலா எனது கிராமத்தைச் சேர்ந்தவள்" என்ற இக்கூற்று பற்றி யாது கூறலாம்?
    1. உண்மை 2. பொய் 3. கூறமுடியாது
11. இலங்கையில் அண்மைக் காலமாக பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம்?
    1. எரிபொருட்களின் விலை அதிகரித்தமை
    2. பொருட்களின் இறக்குமதி அதிகரித்தமை
    3. பொருட்களின் கேள்வி அதிகரித்தமை
12. தமிழ் இலக்கியம் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கும் போது முதலாவதாக செய்யவேண்டியது?
    1. கேட்கப்பட்ட வினாக்களுக்கு பாடலைத் தொடர்பு படுத்தி விடை எழுதுதல்
    2. இலக்கியப் பாடலை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல்
    3. வினாக்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல்.
13. "சிறு வயதில் கற்கும் கல்வியானது மனதில் நன்றாகப் பதியும்." இக்கருத்தைத் தரும் பழமொழி எது?
    1. விளையும் பயிரை முளையிலே தெரியும்
    2. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
    3. இளமையிற் கல்வி சிலையிலெழுத்து

**நான்கு மாணவர்கள் பரீட்சையொன்றில் பெற்ற புள்ளிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

மாலா, விமலாவை விட 15 புள்ளிகளை கூடுதலாக பெற்றாள். எனினும் சர்மிளாவை விட 15 புள்ளிகள் குறைவாகவும் பெற்றாள். கலா, சர்மிளாவை விட 25 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். விமலா பெற்ற புள்ளிகள் 60 எனில்,

14. கலா பெற்ற புள்ளிகள் எத்தனை? 1. 60 2. 65 3. 75
15. ஆகக் கூடுதலாக புள்ளிகள் பெற்ற மாணவி யார்?
    1. சர்மிளா 2. கலா 3. விமலா
16. ஒரு சதுர வடிவான காணியின் சுற்றளவு 240மீ ஆகும். இக்காணியின் ஒரு பக்க நீளம் எவ்வளவு? 1. 120மீ 2. 90மீ 3. 60 மீ
17. இன்று செவ்வாய்க் கிழமை. நாளை மறுதினம் 30ஆம் திகதியாகும். சென்ற சனிக்கிழமை அனுலா தனது 10 வது பிறந்த தினத்தை கொண்டாடியதாக நேற்று கூறினாள். அனுலா தனது பிறந்த தினத்தை கொண்டாடிய திகதி என்ன?
    1. 24 2. 25 3. 26
18. 100கிராம் உடைய 20 தேயிலைப் பைக்கற்றுக்களின் நிறை யாது?
    1. 200கிராம் 2. 2கி.கி 3. 20000கிராம்

பெயர்: ..................................................................
..................................................................
முகவரி: ..................................................................
..................................................................
..................................................................
பாடசாலை: ..................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல்முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவின் பின்....

- மாயன் -

ஜெனீவாத் தீர்மானத்தின் பின் உலகம் ஈழத் தமிழர் தொடர்பான தனது தலையாய கடமையை முடித்துக்கொண்டு நாளாந்த அலுவல்களுக்குப் போய்விட்டதாகவே கடந்த வாரம் அமைந்திருந்தது. பெருங்கொந்தளிப்பாயிருந்த மனிதவுரிமைச் சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் எதையுமே தமிழர்களுக்குத் தராமற் போய்விட்டதோ? என்ற மனவிரக்தியை பெரும்பாலான தமிழர்களிடம் காண முடிகின்றது. தோளிற் சுமந்தோடிய குழந்தையின் தலை சிதறிச் செத்த போது கதறியழுத தகப்பனுக்கு உடனடியாக இத் தீர்மானம் எதனையும் தரவில்லை.

உண்மைதான். உடனடித் தீர்வுகள் எவற்றையும் இத் தீர்மானம் தமிழர்களுக்கு வழங்கவில்லை என்பதை நான் சொல்லி உங்களுக்குப் புரிய வேண்டிய தேவை இல்லை. ஆனால் மறுமுனையில் நிரந்தரத் தீர்வொன்றுக்கான முன்நகர்வின் ஒரு படியைத் தாண்ட வைத்திருக்கின்றது இத் தீர்மானம் என்பது சாலச் சிறந்த கருத்தாகும்.

ஏனெனில் இலங்கை அரசின் நடவடிக்கைகளால் அவ்வரசு மெல்ல மெல்ல சர்வதேச அரங்கிலிருந்து தனித்துப் போய்க்கொண்டிருக்கின்றது என்பதை நாம் அவதானிக்க முடியும். அதற்காகக 2009ம் ஆண்டில் மனிதவுரிமைச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்த பொழுதிலிருந்த அரசிற்கான ஆதரவையும் தற்போது 2012 மற்றும் 2013ம் ஆண்டில் தீர்மானம் வெற்றியடைந்த போது அரசிற்கான ஆதரவையும் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். 2009ல் எதிர்த்த நாடுகள் பல தீமானத்திற்கு ஆதரவாய்த் திரும்பி விட்டன. அவற்றுள் முக்கியமாக நாம் பார்க்க வேண்டிய மூன்று நாடுகளும் முறையே இந்தியா, ஜப்பான், மலேசியா ஆகியவை ஆகும்.

இந்தியா தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க ஜப்பானும் மலேசியாவும் வாக்களிக்காமலே இருந்து விட்டன. இங்கு இந்தியாவும் மலேசியாவும் அவ்விரு நாடுகளிலும் வாழும் உள்நாட்டுத் தமிழர்களின் அழுத்தங்களிற்கு அமையவே இம் முடிவை எடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஜப்பானின் மனமாற்றமானது ஏனைய பல நாடுகளின் மனமாற்றத்திற்கான ஓர் குறியீடாகவே கருதப்பட வேண்டும். ஏனெனில் ஜப்பானில் தமிழர்களின் அழுத்தம் உள்நாட்டில் இல்லை. மேலும் இலங்கையுடன் மிக நீண்ட காலமாக நட்புப் பேணிவரும் நாடாக உள்ளதுடன் சர்வதேச அழுத்தங்கள் எவையுமெ ஜப்பானுக்கு இல்லை. எனில் ஜப்பான் தீர்மான வாக்கெடுப்பில் அமைதியாக இருந்தமையானது இலங்கையின் வெளிநாட்டுறவின் சரிவையே வெளிக்காட்டுகின்றது.

இதனாலேயே இலங்கை மெதுவாக தனிமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று கணிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதனை மேலும் வலுப்படுத்தக் கூடியதாகவே இலங்கையின் அரசியற் தலைவர்களின் உரைகளும் இலங்கையில் உருவாகியுள்ள "பலசேனா"க்களின் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

தீமானத்தினை எதிர்த்து இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த பல நாடுகள் முஸ்லிம் நாடுகளே. இப் பந்தியை எழுதிக்கொண்டு இருக்கும் போது கொழும்பிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான "பெஷன் பக்" என்னும் உடைஅங்காடி ஆதாரமற்ற குற்றச்சாட்டின் பேரில் தாக்கப்பட்டுள்ளது என்னும் செய்தி கிடைத்துள்ளது.

ஹலால், பர்தா, மதத்தலத் தாக்குதல்கள் போன்றவற்றால் ஆதரவளித்த முஸ்லிம் நாடுகளின் ஆதரவையும் இலங்கை இழக்கும் அபாயத்தில் உள்ளது.

அத்துடன் 2012ன் தீர்மானத்துடன் ஒப்பிடும் போது இப்போது நிறைவேற்றப்பட்ட தீமானத்தின் வாசகங்களின் அழுத்தம் கூடியுள்ளது என்பது உண்மை. ஏனெனில் இலங்கை அரசின் எத்தனையோ வாய்ச் சவடால்களுக்குப் பின் அவற்றில் எல்லாம் உண்மையில்லை எனக் கண்டறிந்துவிட்டுத் தற்போது சேர்க்கப்பட்டுள்ள வாசகம் " இலங்கை நம்பத்தகுந்த பக்கம் சாரா விசாரணையை" குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டும் என்பதாக அமைந்துள்ளதானது இலங்கை அரசு தாம் அவ்வாறான விசாரணைகளைச் செய்துள்ளோம் செய்துகொண்டிருக்கின்றோம் என்று சர்வதேசச் சமூகம் நோக்கி விடுக்கும் செய்திகளை யாரும் நம்பத் தயாரில்லை என்பதையே வெளிக்காட்டி நிற்கின்றது. எனவே இத் தீர்மானம் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வொன்றினை நோக்கிச் செல்லும் படியொன்றைத் தாண்ட வைத்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அடுத்து உடனடித் தீர்வொன்றிற்கான தீர்மானமொன்றை ஏன் சர்வதேச நாடுகளால் ஏற்படுத்த முடியாதுள்ளது என்றால் அந்நாடுகள் எவையுமெ இங்கு நடந்தது இனக்கருவறுப்பு என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதாலேயே.

தமிழர் படுகொலையானது இரண்டு சொல்லாடல்களுக்குள் மட்டுப்பட்டுப் போய்க்கிடக்கின்றது. தமிழர்கள் அதனை இனக்கருவறுப்பு (Genocide) என உச்சரிக்கும் அதேவேளை சர்வதேசச் சமூகங்கள் தற்போது வரை அவ்வார்த்தையை உச்சரிக்கத் தயங்கி "போர்க் குற்றங்கள்" (War Crimes) என்ற வார்த்தையைப் பாவித்து வருகின்றன.

இனக்கருவறுப்பு என ஈழத்தமிழர் படுகொலையை சர்வதேசச் சமூகம் ஏற்றுக்கொள்ளுமாயின் அதற்கான தீர்வைத்தர சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும். அத் தீர்வு யாதெனில் தமிழர்கள் தமது உரிமைகளுடன் சுதந்திர மக்களாய் வாழம் அவர்களுக்கான நாடாகவே அமைந்து விடும். எனவேதான் மிகக் கவனமாக தற்போதுவரை எந்தவொரு சர்வதேச அரசும் இலங்கையில் தமிழருக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை இனக்கருவறுப்பு என்ற பட்டியலுக்குள் சேர்க்க விரும்பவில்லை.

அதனால்த்தான் நிகழ்ந்த படுகொலைகளைப் போர்க்குற்றங்கள் என்ற தலைப்பில் சர்வதேச அரசுகள் கையாள முற்படுகின்றன. போர்க்குற்ற விசாரணைகளை இலங்கை அரசே முன்னெடுக்க வேண்டும் என்ற அழுத்தத்தையும் அவை ஏற்படுத்த முனைகின்றன. அவ்வாறு மேற்கொள்ளப்படும் விசாரணைகள் நம்பத்தகுந்த பக்கஞ் சாரா விசாரணைகளாக இருப்பின் அதனை ஏற்றுக்கொண்டு குற்றவாளிகளைச் சட்டப்படி தண்டித்த பின் நடந்த படுகொலைகளைப் போர்க்குற்றப் போர்வையால் மூடி தம்மைப் பாதுகாத்துக்கொள்ள சர்வதேசச் சமூகம் விளைகின்றது.

எனவேதான் அனைத்து முன்மொழிவுகளிலும் இலங்கை அரசே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அழுதத்தை அவை உறுதியாகப் பற்றி நிற்கின்றன.

அவ்வாறு இலங்கை நியாயமான பக்கச் சார்பற்ற விசாரணையை மேற்கொள்ளாது விட்டால் யாதாயினும் ஒரு காலகட்டத்தில் சர்வதேச விசாரணை என்பது சாத்தியமாகும். அவ்வாறு விசாரிக்கப்பட்டால் இங்கு நடந்தது போர்க்குற்றமா அல்லது இனக்கருவறுப்பா என்பது வெட்ட வெளிச்சமாகும். அவ்வாறு வெளிச்சமாகும் போது சர்வதேசம் நடவடிக்கையொன்றை எடுக்கும் இக்கட்டான சூழலுக்குள் தம்மைத் தள்ளத் தயாரில்லாமலே உள்ளமையைக் காணலாம்.

ஏனெனில் தற்கால கட்டத்தில் சர்வதேச ஒழுங்கானது ஒருமுகத் தன்மையிலிருந்து பன்முகத்தன்மைக் கட்டுப்பாட்டுப் பண்புக்குள் இயங்கிக் கொண்டிருப்பதை உணரலாம். அதாவது தசாப்த காலங்களுக்கு முன் அமெரிக்கக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கிய உலகம் இன்று பொருளாதாரப் பலம் மிக்க சர்வதேச அரசுகளின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கிக் கொண்டிருப்பதையே மேற்சொன்ன விடயம் குறித்து நிற்கின்றது. அதனால்தான் சீனாவினதும் இந்தியாவினதும் குரல்கள் சர்வதேச அரங்கில் பெறுமதியைப் பெற்றுள்ளன. இதனால் நடவடிக்கையொன்றை எடுக்க முனையும் சர்வதேச அரசானது பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே அந் நடவடிக்கையை வெற்றியடையச் சய்ய முடியும். பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கடும் முயற்சிகளிலும் அந்நாடு ஈடுபட வேண்டும். இவ்வாறானதொரு நிலை அமெரிக்காவிற்கும் ஏற்பட்டிருந்ததை நாம் நினைவிற் கொள்ளலாம். எப்போதெனில் 2012ல் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த முதலாவது தீர்மானத்தினை வெற்றி பெறச் செய்வதற்கு அந் நேரம் அச்சபையில் அங்கம் வகித்த சீனா, இரஸ்யா உட்பட்ட நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள பெரும் சவாலை அமெரிக்கா எதிர் கொண்டிருந்தது. இறுதியில் அப்போதைய அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் அம்மையார் ஹிலாரி கிளிங்டன் அவர்கள் நேரடியாகக் களத்தில் இறங்கியிருந்தமை நினைவில் இருக்கலாம்.

எனவேதான் இயலுமானவரை சர்வதேச அரசுகள் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின் விசாரணையை இலங்கை அரசே நியாயமாகவும் பக்கச் சார்பற்ற முறையிலும் மேற்கொள்ள வேண்டும் என்ற கடும் பிடியிலிருப்பதாகவே தோன்றுகின்றது.

எனவே சர்வதேச அரசுகள் இலங்கைக்குள் விசாரணைப் பொறிமுறையுடன் நுழைவதற்கு இன்னும் காலங்கனியவில்லை.

அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்.............?

## மாசி 2009

இசை..
கரும்புகையினூடே
அதிர்ந்து .. அதிர்ந்து
வீழ்ந்தவிடமெல்லாம்..
மணல் மூடி
மரம் சரித்து
குழி மூடிக்
குழிபறித்து
மனிதப் பிணக்காட்டில்
ஈஸ்வரனாடும்
இசை.....

இசை பூந்து
உடலங்கள்
சிதறித் தெறித்தன ..
இசை.... இறந்த
பிணங்களின்
நிணங்களின் மீது
மொச்சை நாற்றமெடுத்து
வழிந்தோடிற்று

பக்கவாட்டு
மேளங்கள்
பறையுடன் கூடிச்
சிவன்
பிண நடனம் ஆட
சாம்பல் துகள்களாய்
வீழ்ந்தன
மனிதக் குருத்துக்கள்.

சிதைந்து வீழ்ந்த
சிறுகுருத்தொன்றின்
கபாளம் ஏந்திச்
சிவன் ஆட
அச் சிறுகுருத்தின்
தாய் பெருங்குரலிற்
கதறியழுகிறாள்

அவள்
வாயினூடு பூந்து
வயிற்றைக் கிழித்துச்
தசையும்...எலும்பும்
நிணமும்....குருதியும்
இணைந்து
இசை
இறுதி வடிவமெடுக்கச்

சிவன் . . .
இன்னும் பிணந்திண்ணக்
கரும் புகை
இசைக்கின்றான் . .

சரண்
புகத்
தாயொருத்தி
எழுந்து
நிற்கிறாள்
அவள்
கால்களின்
கீழ்
சிவன் தின்ற
சிறு குருத்தின் உடல்
சிறு விரல்கள்
வெளித்தெறிய
புதைந்து கிடக்கிறது

சிவனுமை பாகா.....
நாம் புல்லாய்ப்
பூடாய், புழுவாய்
மரமாய், பல்மிருகமாய்ப்
பாம்பாய்க் கல்லாகிய
காலமெல்லாம் - உன்
நாமம் செபித்திருக்க

எமைப் - பேயாய்
ஏன்
அலைய விட்டாய்?

மாயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பேசும் மக்கள்..

புல்மோட்டை, ஜின்னாபுரம் எனுமிடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக போட்டியிட்ட சின்ன மரைக்கார் பளீல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக நியமிக்க தயார் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் பகிரங்கமாக நான் அறிவித்திருந்தேன்.

தேர்தல் முடிவுகளின்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக்கட்சி 4 ஆசனங்களையும் பெற்று மொத்தமாக 22 ஆசனங்களுடன் நாம் பெரும்பான்மையாக இருந்தோம்.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியில் உள்ள ஒரு முஸ்லிமை முதலமைச்சராக வருவதற்கு ஆதரவளித்தது. திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை முஸ்லிம் கிராமத்தில் முஸ்லிம் மக்களின் காணிகள் இன்று பறிபோகின்ற ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

எமது கைகளில் முஸ்லிம் முதலமைச்சர் பதவி இருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. தந்தை செல்வா காலத்திலிருந்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் சமூகம் என்றுதான் நடந்து வந்துள்ளோம்.

பண்டா -செல்வா மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியன வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வருகின்ற பிரதேசம் என்ற அடிப்படையில் சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றே செய்து கொள்ளப்பட்டன.

இன்று இனப்பிரச்சனை சர்வதேச மயப்படுத்துப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறும் பட்சத்தில் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும். இந்த தருணத்தில் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்கள் என்ற வேறுபாடின்றி தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். முஸ்லிம் மக்களின் கைகளில் தான் இது தங்கியுள்ளது" எனறார்.

## சம்பூர் நவரட்ணபுரம் கிராமத்தில்..

அத்துடன் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த சம்பூர் சூடைக்குடா சுனாமி வீட்டுத்திட்டக் கிராமத்தைச் சேர்ந்த 48 குடும்பங்கள் காடுமண்டிக்கிடக்கும் தமது கிராமத்தை 19.03.2013ல் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இவ்வாறு மக்களை அழைத்துச் செல்ல இராணுவத்தினரே ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். குழுவில் கிழக்கு மாகாண அபிவிருத்தி இணைப்பதிகாரி மேஜர் பேர்ட்டி பெரேரா, மூதூர் பிரிகேட் கொமாண்டர், சம்பூர் கடற்படைப் பொறுப்பதிகாரி டி.ஏ.எல். குணரெட்ன, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பியந்த பத்திரன மற்றும் கிளிவெட்டி நலன்புரி நிலைய பொறுப்பாளர்களான ஆர்.சிவப்பிரகாசம், ரீ.மங்களேஸ்வரி, விமலாதேவி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சம்பூர் வில்லுக்குளத்தடியில் கொண்டுசென்று இறக்கப்பட்ட மக்கள் ஏழு வருடங்களின் பின்னர் தமது வாழிடங்களை நேரில் கண்டனர். ஏழு வருடங்களுக்கு முன்னர் அவர்கள் வாழ்ந்த குடிமனைகள் இப்பொழுது இருந்த இடம் தெரியாமல் காடுமண்டிய நிலையில் அழிவடைந்து கிடக்கின்றன.

இடம்பெயர்ந்த அகதி மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடு-களில் தாம் மும்முரமாக ஈடுபட்டிருப்ப-தாகவும், சம்பூரையும் அதனைச் சூழவுள்ள கிராமங்களையும் இலங்கையின் முன்மாதிரி வளங்-கொழிக்கும் இடமாக மாற்றுவதற்குத் தாம் திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பியந்த பத்திரன மக்களிடம் பேசும்போது குறிப்பிட்டார்.

அத்துடன் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த சம்பூர் சூடைக்குடா சுனாமி வீட்டுத்திட்டக் கிராமத்தைச் சேர்ந்த 48 குடும்பங்கள் காடுமண்டிக்கிடக்கும் தமது கிராமத்தை 19.03.2013ல் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இவ்வாறு மக்களை அழைத்துச் செல்ல இராணுவத்தினரே ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். குழுவில் கிழக்கு மாகாண அபிவிருத்தி இணைப்பதிகாரி மேஜர் பேர்ட்டி பெரேரா, மூதூர் பிரிகேட் கொமாண்டர், சம்பூர் கடற்படைப் பொறுப்பதிகாரி டி.ஏ.எல். குணரெட்ன, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பியந்த பத்திரன மற்றும் கிளிவெட்டி நலன்புரி நிலைய பொறுப்பாளர்களான ஆர்.சிவப்பிரகாசம், ரீ.மங்களேஸ்வரி, விமலாதேவி ஆகியோர் இடம்-பெற்றிருந்தனர். சம்பூர் வில்லுக் குளத்தடியில் கொண்டுசென்று இறக்கப்பட்ட மக்கள் ஏழு வருடங்களின் பின்னர் தமது வாழிடங்களை நேரில் கண்டனர். ஏழு வருடங்களுக்கு முன்னர் அவர்கள் வாழ்ந்த குடிமனைகள் இப்பொழுது இருந்த இடம் தெரியாமல் காடுமண்டிய நிலையில் அழிவடைந்து கிடக்கின்றன. இடம்பெயர்ந்த அகதி மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடு-களில் தாம் மும்முரமாக ஈடுபட்டிருப்ப-தாகவும், சம்பூரையும் அதனைச் சூழவுள்ள கிராமங்களையும் இலங்கையின் முன்மாதிரி வளங்-கொழிக்கும் இடமாக மாற்றுவதற்குத் தாம் திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பியந்த பத்திரன மக்களிடம் பேசும்போது குறிப்பிட்டார்.

## பாவனைக்கு உதவாத டீசல்..

வியட்நாமிய கப்பலில் தரம் குறைந்த டீசலே வந்திருப்பதாக குற்றஞ்சாட்டி லங்கா இந்திய எண்ணை நிறுவனம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

தரங்குறைந்த எரிபொருளை ஏற்றிவந்த கப்பல் தற்போது திருமலைத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு வர்த்தக நீதி மன்றில் தொடரப்பட்ட வழக்கில் முதலாவது அமர்வில் கப்பல் கம்பனி சார்பாக வாதிட்ட வழக்கறிஞர் மத்தியஸ்தத்தைப் பெற்றுக் கொள்வதற்காக லண்டன் கப்பலோட்டக் கழகத்தில் மனுத்தாக்கல் செய்ப்பட்டிருப்பதால் தடுப்பிலிருந்து கப்பலை விடுவிக்குமாறு கோரினர். எனினும் இதற்கு லங்கா ஐ.ஓ.சியின் வழக்குரைஞர் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து இரண்டாவது அமர்வுக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 28.03.2013 அன்று இரண்டாவது அமர்வின்போது கப்பலின் காப்புறுதிக் கம்பனி நட்டத்தொகையினை ஐ.ஓ.சி இற்கு செலுத்த ஏற்றுக்கொண்டதை அடுத்து கப்பலை விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## மின்சார கட்டண உயர்வு..

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலையீட்டால் மின் அலகுச் செலவினை 3 ரூபா 64 சதத்தால் குறைக்கக் கூடியதாக இருந்தது எனத் தெரிவித்த அவர் இதன் விளைவாக அதிகரிக்கும் கட்டணங்களின் தொகையையும் அலகிற்கு ரூபா 4ற்குள் வைத்திருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## யாத்திரிகரின் பேருந்தை..

மோதியதில் யாத்திரிகர் பதினைந்து பேர் காயமடைந்த சம்பவம் கந்தளாயில் நிகழ்ந்துள்ளது.

கந்தளாய் சேருநுவர வீதியின் 25வது மைல் கல்லிலேயே இவ்விபத்து நிழ்ந்துள்ளது. காயமடைந்தவர்கள் திருகோணமலை, மூதூர் மற்றும் சேருநுவர வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 25ம் திகதி அதிகாலையிலேயே இவ் விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்துக்கான காரணம் தேடி காவல்துறை விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது.

## ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத்தில் இலங்கை தொடர்பான விவாதம்.

இலங்கையின் தற்போதய நிலையும் அதன் போக்கும் தொடர்பாக ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றம் கரிசனை கொண்டுள்ளது என பாராளுமன்ற உதவிச் செயலாளர் தெரிவித்துள்ளார். 2011ம் ஆண்டு தங்காலையில் கொலை செய்யப்பட்ட பிரித்தானிய பிரஜையின் கொலைக்கு நீதி கேட்டு அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐக்கிய இராச்சிய பாராளுமன்ற உறுப்பினர் சிமோன் டன்சக் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத்தில் நிகழ்ந்த இவ்விடயத்தை வெளிப்படுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்சி பேதங்களை மறந்து தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் நிற்க வேண்டும்: சம்பந்தன்

- சி. குருநாதன்

தமிழ் பேசும் மக்கள் கட்சி பேதங்களை மறந்து ஓரணியில் நிற்க வேண்டிய காலம் இதுவாகும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை, திரியாய் கிராமத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்-பிரச்னைக்கு தீர்வு ஒன்றைக் காணும்படி இலங்கை அரசாங்கத்தை சர்வதேச ச்மூகம் வற்புறுத்தி வருவதே இதற்கான காரணமாகும்.

யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியதன் காரணமாகவேதான் இன்று இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை எதிநோக்க வேண்டியிருக்கின்றது.

அந்த தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு பதில் இலங்கை அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன விகிதாசாரத்தை மாற்றி அமைக்கும் விதத்தில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

இதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு செயலாற்றுவதன் மூலமே தான் இது சாத்தியமாகும்" என்றார்.

## பால்மாவில் விசம்?..

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை பெற்றுள்ளதாக தெரியவருகின்றது. "டைசயன் டையாமைட்" எனும் பதார்த்தமே கலந்திருப்பதாக சந்தேகம் தோன்றியுள்ளது. இவ் இரசாயனப் பதார்த்தம் வெந்நிறமான பளிங்கு துணிக்கைகளாக இருப்பதுடன் நீரில் கரையும் தன்மையையும் கொண்டவை. பிளாஸ்டிக் உற்பத்திக்கும் மருந்துப் பொருட்களின் உற்பத்திக்குமே பயன்படும் இப்பதார்த்தமே இறக்குமதி செய்யப்படும் பால்மாவிற் கலந்துள்ளதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

இச் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக இறக்குமதிப் பால்மாக்களின் மாதிரிகள் வெளிநாட்டிற்கு ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. எந்த வகைப் பால்மாவில் இவ் இரசாயனம் கலந்துள்ளது என்பது தெரியாததால் அனைத்துவகைப் பால்மாக்களின் மாதிரிகளும் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

# வறிய மாணவர்களுக்கு உதவி

### பதவிசிறி புரவில் இராணுவம்

### நாமகள் வித்தியாலயத்தில் நந்தகுமார்

பதவிசிறி புரவின் காவந்திஸ்ஸ புர வித்தியாலயத்தைச் சேர்ந்த 148 மாணவர்களுக்கு 62வது படைப் பிரிவின் 622வது பிரிகேட் இராணுவம் சுமார் 82 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகளையும் மூன்று மின்விசிறி-களையும் ஓ.எஸ் லங்கா நிறுவனம் என்ற அமைப்பின் நிதியுதவியுடன் வழங்கியுள்ளது.

வன்னிப் படைத் தலைமை அலுவலகத்தின் கீழ் இயங்கும் 622வது படைப் பிரிவினர் இந்நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

திருகோணமலை நாமகள் வித்தியாலய மாண்வர்கள் இருபத்தைந்து பேருக்கு திருகோணமலை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் க. லிங்கராசாவினால் காலனிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. தற்போதை நகரசபை உறுப்பினர் சி. நந்தகுமார் அவர்களின் ஏற்பாட்டில் இக்காலணிகள் வழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் முன்னாள் அதிபர் சி. நவரத்தினம் 'அவர்களும் இக்காலணிகளை வழங்கி வைத்திருந்தார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு முரசு

## இராசிச் சக்கரம்

- ♦ கும்பம் - நீர்ப்பானை குடம்
- ♦ மீனம் - மீன்
- ♦ மேஷம் - செம்மறிக்கடா
- ♦ ரிசபம் - எருது
- ♦ மிதுனம் - இரட்டையர்
- ♦ கடகம் - நண்டு
- ♦ சிம்மம் - சிங்கம்
- ♦ கன்னி - கன்னி
- ♦ துலாம் - தராசு
- ♦ விருச்சிகம் - தேன்
- ♦ தனுசு - வில்லம்பு
- ♦ மகரம் - கடலரக்கன்



## அறிவுத் துளிகள்

1. தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சு கருவியின் பெயர் ஸ்கியூபா ஆகும். (SCUBA - Self Contained Underwater Breathing Apparatus)
2. முதன் முதல் 1893 ம் ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்ட நாடு அமெரிக்கா.
3. தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் மூன்று அடிப்படை நிறங்கள் பச்சை, நீலம், சிகப்பு
4. பிளாஸ்டிக்குகளை எரிக்கும் பொழுது டையாக்சின் என்ற நச்சுப் புகை வெளியகிறது.
5. சூப்பர் கணனியின் வேகம் வினாடிக்கு ஃ.லாப்ஸ் (Flops) என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.
6. பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணர்கிறது.
7. காண்டா மிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல.அவை மிகக் கடினமான மயிரிழைகளால் உருவானவை.
8. அனப்லெப்ஸ் என்ற மீனுக்கு இரண்டு கண்களில் நான்கு விழித்திரைகள் உண்டு.

## பாட்டுப் பாடும் வெட்டுக்கிளி

ஓர் ஆற்றங்கரையில் ஒரு பெரிய மாமரம் இருந்தது. நன்றாக செழித்து வளர்ந்து நிற்கும் அந்த மாமரத்தின் அடியில் சிறிய இரண்டு வீடுகள் இருந்தன. ஒரு வீட்டில் ஒரு வெட்டுக்கிளி ராணியும் மற்றைய வீட்டில் ஓர் எறும்பு ராணியும் வசித்து வந்தனர். இவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள். இருவரும் மிகவும் சந்தோசமாக ஆடிப் பாடி மகிழ்வார்கள். இவ்விரண்டு பேர்களிலும் எறும்பு ராணி சோம்பல் இல்லாமல் எந்நேரமும் வேலை செய்வாள். தனக்குத் தேவையான உணவை சேகரித்து தனது வீட்டினுள் கவனப்படுத்தினாள். இருந்தாலும் வெட்டுக்கிளி ராணியோ வேலை செய்வதை விட கூடுதலாகப் பாட்டுப் பாடிக்கொண்டிருப்பாள். எறும்புராணி ஏதேனும் வெட்டுக்கிளி ராணியிடம் கேட்டால் ஏதேனும் காரணங்கள் சொல்லி சமாளித்துவிடுவாள். இப்படி இருக்கையில் ஒரு நாள் கடுமையாக மழை பெய்ய ஆரம்பித்தது. இதனாலேயே ஆற்றில் நீரோட்டமும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தது. வெட்டுக்கிளி ராணி இன்னமும் பாடிக்கொண்டே இருந்தாள். எறும்பு ராணி வீட்டினுள் செல்லும்படி எவ்வளவோ சொல்லியும் அதைக் கேட்காமல் தனக்கு பாட்டுப்பாடுவதே மிகவும் விருப்பமானது என கூறி எறும்பு ராணியின் சொல்லை கேட்காமல் மறுத்துவிட்டது. வெள்ளம் பெருக்கெடுத்தது. அப்பொழுதும் "வாருங்கள் நாங்கள் மரத்தின் உச்சிக்கு ஏறுவோம்'' என்று எறும்பு ராணி வெட்டுக்கிளி ராணியை உரக்க சத்தமிட்டு அழைத்தாள். என்றாலும் வெட்டுக்கிளி ராணி கொஞ்சங்கூட கவலைப்படாமல் இருந்தாள். எறும்பு ராணிக்கு சரியான பயமாக இருந்தது. எறும்பு ராணி வீட்டின் யன்னலைத் திறந்து ஆற்றைப் பார்த்தாள். ஆறு நன்றாக பெருக்கெடுத்து ஓடிக் கொண்டு இருந்தது. ஆற்றங்கரைப் பக்கம் இருந்த வெட்டுக்கிளி ராணியின் வீடு ஆற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் உடைந்தது. வெட்டுக்கிளி ராணியை தன்னுடன் வந்து இருக்குமாறு எறும்புராணி கெஞ்சிக் கேட்டது. ஆனால் அதையும் தட்டிக்கழித்து விட்டு மழையை ரசித்து அதற்கேற்ப பாட்டுகளைப் பாடிக் கொண்டிருந்தது அந்த வெட்டுக்கிளி ராணி. இன்னும் கொஞ்ச நேரத்தில் எனது வீடும் வெள்ளத்தில் அமிழ்ந்து விடும் என்று எறும்பு ராணி எண்ணினாள். அதன் பிறகு தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள மரத்தின் உச்சிக்கு எறும்பு ராணி ஏறினாள். அதிக நேரம் போகவில்லை ஆறு கரையை நோக்கி பெருக்கெடுத்தது. அத்தோடு வெட்டுக்கிளி ராணி அந்த ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டாள்.

# மகளீர் முரசு

## பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறையும் இலங்கை குடும்ப வன்முறைத்தடுப்புச் சட்டத்தின் நோக்கெல்லையும்

சமூகக்கட்டமைப்பில் ஆரம்ப அலகாகவும் கலாசார பாரம்பரியங்களின் முதற்கட்ட வளர்ச்சிப் படியாகவும் குடும்பம் விளங்குகின்றது. இக்குடும்ப அலகிலே முதன்மையான இடத்தை பெண் தக்கவைத்துக்கொள்கிறாள். இவளுக்கெதிராக நடைபெறும் இல்லத்து வன்முறையும் அதனை தடுக்க வல்ல வன்முறைதடுப்புச் சட்டத்தின் பொருத்தப்பாட்டையும் அடியொற்றியே இக்கட்டுரை அமைகிறது.

வன்முறை என்பது உடல், உள ரீதியாக துன்புறுத்துவதை சுட்டிக்காட்டுகிறது. அடித்தல், தீச்சொல், பாலியல் வன்புணர்வு ஆகிய அசாதாரண செயல்களை நாம் இப்பிரிவினுள் உள்ளடக்கலாம். இதனுள் பெரும் பிரிவான வீட்டு வன்முறையினுள்ளே நாம் இக்கட்டுரையின் பிரதான நோக்கான பெண்ணையும் அவளுக்கெதிரான குடும்ப வன்முறைகளையும் எடுத்து நோக்கும் போது பெரும்பாலும் பாதிக்கப்படுவது பெண் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' போன்று யாவரும் அறிந்தவிடயம். குடும்ப பந்தத்தில் இணைந்தவுடனேயே பெண் குடும்ப விலங்காக மாறி தன்னைத்தானே அர்ப்பணம் செய்து குடும்ப அலகில் மனைவியாக, தாயாக வாழ்கின்றாள். இவ்வாறு வாழும் அவள் மீதே வன்முறைகள் தொடர்கின்றன. இன்று சுமார் 60 வீதம் வரையான பெண்களுக்கெதிரான சமுதாய பிரச்சனைகளுக்குள் வீட்டு வன்முறையே மிகப் பிரதான இடத்தை பிடித்து நிற்கின்றது.

இதற்கான காரணம் என்னவென்பது எம் மத்தியில் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்காக பல்வேறு காரணங்களை நாம் காட்டலாம். அதாவது கணவன், மனைவிக்கிடையே பரஸ்பர பரிந்துணர்வு இல்லாமை, சந்தேகம், போதியளவு கல்வியறிவின்மை, அறியாமை, தாம்பத்திய உறவு தொடர்பில் புரிந்துணர்வு இன்மை, நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு மத்தியில் குடும்பத்தை நடாத்தல், கணவன் குடிபோதைக்கு அடிமையாதல், ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடல் போன்ற பல்வேறு விடயங்களை அடித்தள காரணங்களாக சுட்டிக்காட்ட முடியும்.

சமூகத்தில் இதன் தாக்கம் எத்தகையது என்றால் உண்மையில் கருத்து மோதலின் விளைவாக, கைகலப்பு ஏற்பட்டு இன்று எத்தனையோ குடும்பங்களை விவாகரத்தை நாடி நீதிமன்றத்தை வந்தடைகின்றன. மேலும் இறப்புக்கள் ஏற்படுகின்றன. இதன் பாரிய தாக்கத்தினால் சிறார்கள் பாதிப்படைகின்றனர். இன்றைய சிறுவர்களே நாளை தலைவர்கள் என்னும் தத்துவம் தளர்த்தெறியப்படுகின்றது.

எமது 1978 அரசியலைப்பின் கீழ் உறுப்புரை 12ற்கு ஏற்ப ஆளெவரும் பால், இனம், மொழி போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக பாகுபாடு எதற்கும் உள்ளாக கூடாது என்று புலப்படுத்துகின்றது. [illegible] எமது சமயம் [illegible] அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தின் ஊடாக உணர்த்தி வருவதை அவதானிக்கலாம். ஆகையால் தாய்மை என்ற தனித்துவப்பண்பை தக்கவைத்து தாயகம் வாழ தன்னையே அர்பணிக்கும் பெண்ணுக்கெதிராக எதற்காக வன்முறை என்ற கேள்வி எம் மணக்கண் முன் எழுகின்றது. ஆனாலும் எம் சமுதாயப்பார்வையில் அடிக்கடி பேசப்படுகின்ற விடயமாக இல்லத்து வன்முறையில் பெண் காணப்படுகிறாள். இந்த [illegible] அமைதி, ஒழுங்கு, [illegible] என்பவற்றை நிலைநாட்டுவதே சட்டத்தின் தலையாய கடமையாக அமைகின்றது. குறிப்பாக குடும்ப வன்முறையை தடுப்பதற்கு 2005ம் ஆண்டின் 34ம் இலக்க (prevention of domestic violence act) குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் உருவாக்கப்பட்டது. குடும்ப அலகில் நடைபெற்றுக்கொன்டிருக்கின்ற, நடைபெறவிருக்கின்ற உடல், உள ரீதியான இம்சைகளை தரக்கூடிய செயல்களை தடுத்து நிறுத்துவதையே பிரதான நோக்காகக் கொண்டு இச்சட்டம் உருவாக்கப்பட்டது.

தொடரும்...

## பாதாம் கீர்

*தேவையான பொருட்கள்:*
ரின் பால் - 1ரின், பால் - 3 போத்தல், கஜு - 100 கிராம், ஆல்மண்ட் அல்லது அன்னாசி எசென்ஸ் - 2 தே.க, கலரிங் - விரும்பியது.

*செய்முறை:*
பாலைக் காய்ச்சி, இரு மறை நன்றாகக் கொதித்தவுடன் இறக்கி ஆறவைக்கவும். கஜுவைத் துப்பரவாக்கிக் கழுவி எடுத்துப் பாத்திரத்தில் இட்டு 1 தம்ளர் ஆறிய பாலை விட்டு நான்கு மணிநேரம் ஊறவைத்தெடுத்து கிரைண்டரில் விட்டு நன்றாக அரைத்தெடுக்கவும். பின்பு அரைத்த கலவையைப் பாத்திரத்தில் விட்டு ரின் பால், மிகுதியாகவுள்ள பால், எசன்ஸ் கலரிங் என்பன கலந்து நன்கு கலக்கிக் கொள்ளவும். பின்னர் இக்கலவையை இரண்டு மணிநேரம் வரை குளிரூட்டியில் வைத்துப் பரிமாறலாம்.

## கத்தரிக்காய் மாசிக்கறி

*தேவையான பொருட்கள் :*
கத்தரிக்காய் - 1/4 கி.கிராம், சிறிதாக வெட்டிய வெங்காயம் - 3மே.க, சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் - 1மே.க, சிறிதாக வெட்டிய உள்ளி - 1தே.க, சிறிதாக வெட்டிய கறிவேப்பிலை - 1மே.க, கடலை 50கிராம், மாசிக் கருவாட்டுத் தூள் - 3மே.க, வெந்தயம் - 1தே.க, கடுகு - 1தே.க, பெருஞ்சீரகம் - 1தே.க, பெருங்காயம் - 1குண்டுமணியளவு, பழப்புளி - அளவாக, தடிப்பான தேய்காய்ப்பால் - 1 தம்ளர், மஞ்சள்த்தூள் - 1 தே.க, உப்பு - அளவிற்கு, தேங்காயெண்ணெய் - அரை போத்தல், கறி மிளகாய்த்தூள் - 1மே.க

*செய்முறை :*
கத்தரிக்காயை ஓரளவு தடிப்புள்ள சிறு துண்டுகளாக வெட்டிக் கழுவி மஞ்சள்த் தூள் சேர்த்துக் குழைத்து கொதிக்கும் எண்ணெயிலிட்டு பொன்னிறமாகப் பொரித்தெடுத்துக் கொள்க. கடலையை ஊறவைத்து அவித்தெடுத்து வேறாக வைக்கவும். பழப்புளியை 5 மே.க தண்ணீரில் கரைத்து வைத்துக் கொள்ளவும். தாச்சியில் இரண்டு மேசைக்கரண்டி எண்ணெயைக் காயவைத்துக் காய்ந்த பின் கடுகைப் போட்டு வெடிக்க வைத்து வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், உள்ளி, கறிவேப்பிலை என்பவற்றையிட்டு வதங்க விட்டு அரைப்பதமாக வதங்கியவுடன் வெந்தயம், வெந்தயம், பெருஞ்சீரகம் என்பவற்றையும் இட்டு வதங்கவிடவும். பின்பு அதனுள் அளவான உப்பு, மிளகாய்த்தூள், பழப்புளிக் கரைசல், பால் என்பவற்றை விட்டு பெருங்காயத்தை அப்பாத்திரத்தின் மூடியில் சிறிதளவு தண்ணீர் சேர்த்து அரைத்து அம்மூடியால் மூடி அவியவிடவும். தூள் அவிந்து வாசனை வரும் போது, பொரித்த கத்தரிக்காய் மற்றும் கடலை, மாசிக் கருவாட்டுத் தூள் என்பனவற்றையிட்டு கறி நீர் வற்றிச் சுண்டித் திரளும் போது இறக்கிக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### தமிழ் நாட்டிலிருந்து அலுவலகத்தை இடம்மாற்றுமா – இலங்கை உயர்ஸ்தானிகராலயம் – கேரளாவுக்கு நகரும் சாத்தியம்

சென்னையில் தற்போது இயங்கி வரும் இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயமானது கேரளா நோக்கி நகர்த்தப்படலாம் என்ற செய்தி வெளியாகியுள்ளன. கேரளா மாநிலத்தின் தலைநகரமாக திருவேந்திரம் நோக்கி இந்நகர்வு நிகழலாம் என எதிர்வு கூறப்படுகிறது. இந்தியாவின் தமிழ் நாட்டில் இலங்கைக்கெதிராக எழுந்துள்ள உணர்வலைகளால் சென்னையில் இலங்கையின் உயர்ஸ்தானி-கராலயத்தின் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என வெளிவிவகார அமைச்சின் அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளதுடன் அங்கு பணியாற்றும் அலுவலர்கள் வன்முறைகளை எதிர்கொள்ள வேண்டியுமுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அண்மையில் இரண்டு புத்த பிக்குகள் சென்னையில் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் இந்திய மத்திய அரசும் மாநில அரசும் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று இலங்கைக்கு உறுதியளித்திருந்ததுடன் இவ்வாறு இனி நிகழாமல் தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். அத்துடன் அவர் புத்த பீடங்கள் பலவற்றுக்கும் சென்று இவ்விடயம் தொடர்பாக பேசியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### அதிர்ச்சி தரும் உயர்வு – அடுத்த மாதத்தில் – எனினும் இ.மி.ச கடன் பொறியிலேயே!

எதிர்வரும் மாதத்திலிருந்து பெரும்பாலும் அதிர்ச்சி தரும் கட்டண உயர்வை இ.மி.ச அமுலாக்கவுள்ள போதிலும் 30 பில்லியன் ரூபாய்க்கும் மேற்பட்ட அதனது கடன் சுமையிலிருந்து இலங்கை மின்சார சபையை வெளியேற்றும் சக்தி இக்கட்டண உயர்வுக்கு என்றே அலுவலர் ஒருவர் தெரிவித்தார். கட்டண உயர்வால் மேலதிகமாக பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படும் 48 பில்லியன் ரூபாய்கள் மின் உற்பத்திக்கான எண்ணெய்ச் செலவுகளுக்கே போதுமானதாக இருக்கும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தமக்கு கடன் பாக்கிகளைச் செலுத்தாதுள்ள அரசதுறை நிறுவனங்களின் மீது கடன் எல்லைகளை விதித்ததாலேயே இந்நிலை எழும் என தெரியவருகின்றது.

### நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் ஈடுபடும் மாணவர்கள் கட்டாய மருத்துவ பரீட்சைக்கு உட்பட வேண்டும்.

நீண்ட தூர ஓட்டப்போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்கள் மாரடைப்பால் மரணமடைந்ததைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் ஓட்டப்போட்டிகளுக்கு கலந்து கொள்ளும் மாணவர்கள் போட்டிகளுக்கு முன் கட்டாய மருத்துவ பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படவேண்டும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 2007ல் வெளிவிடப்பட்ட அரச சுற்றுநிருபத்திற்கு மேலதிகமாக அடுத்த வாரம் வெளிவிடப்படவுள்ள புதிய சுற்றுநிருபத்தின் படி 15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் 3000 மீற்றர்களுக்கு மேற்பட்ட தடகளப் போட்டியில் ஈடுபட விரும்பினால் மருத்துவ பரிசோதனையின் பின்னரேயே ஓட்டப்போட்டிகளுக்கு அவர்களை இணைக்க வேண்டும் எனும் அறிவுறுத்தல் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது. இம் மருத்துவ பரிசோதனையில் இலத்திரனியல் இதய வரைபுப் பரிசோதனை (ECG - Electro Cardio Gram) யும் சேர்க்கப்பட்டுள்ளது. கடந்த இரு மாதங்களில் 3 மாணவிகள் உட்பட நால்வர் 3000 மீற்றர்களுக்கு மேற்பட்ட ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டிருந்த போது மாரடைப்பால் மரணமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. இம் மருத்துவப் பரிசோதனையானது பாடசாலைக்கு அண்மையிலுள்ள அரச வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## The Sunday Observer:

### வெளிநாட்டு தூதராலயங்கள் உசார்படுத்தப்பட்டுள்ளன

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சலனப் படங்களை இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டது என்ற தலைப்புடன் வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பயன்படுத்தி வருவதை உறுதிப்படுத்தியுள்ள வெளிநாட்டு அமைச்சு பிறதேசங்களிலுள்ள தூதராலயங்களை இவ்விடயம் தொடர்பாக உசார்படுத்தியுள்ளது. மார்ச் 21ந் திகதி சென்னையில் நிகழ்ந்த எதிர்ப்பார்ப்பாட்டம் ஒன்றில் விடுதலைப்புலிகளால் கெப்பிட்டிகொலாவில் ஏற்பட்ட குண்டுத்தாக்குதலில் இறந்த மகனைக் கையிலேந்தி அழும் தகப்பனின் சலனப்படத்தை இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறி அங்கிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கையிலேந்தியிருந்ததை அரசு அவதானித்துள்ளது. இதைத்தொடர்ந்தே இவ்வறிவித்தல் உலக நாடுகளில் உள்ள தூதுவராலயங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தயத்த கிருள்ளவுக்கு வருபவர்கள் தண்ணீரில் மூழ்க வேண்டாம் – காவல்துறை எச்சரிக்கை –

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை பார்வையிட அம்பாறைக்கு பல்லாயிரக் கணக்கில் படையெடுக்கவுள்ள மக்கள் அப்பிரதேசத்துக்கு அருகாமையிலுள்ள குளங்கள், அருவிகள், ஓடைகள் போன்றவற்றில் நீராடச் சென்று மூழ்கி இறக்கும் அபாயத்தை தேடிக் கொள்ள வேண்டாம் என காவல்துறை எச்சரித்துள்ளது. தற்போதுள்ள சூடான காலநிலையால் அம்பாறைக்கு வருபவர்கள் மேற்சொன்ன நீரோடைகளில் நீராட முயற்சிப்பர் என்பதாலேயே இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. காவல் துறையால் பாதுகாப்பன இடங்கள் என குறிக்கப்பட்டுள்ள இடங்களில் குளிக்குமாறு மக்களை அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### அதியுயர் இலக்கை முட்டியது மீன் உற்பத்தி

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012ல் 50 வீத அதிகரிப்பை உள்நாட்டு மீன் உற்பத்தி எட்டியுள்ளதுடன் இலங்கை வரலாற்றில் சாதனை உற்பத்தியினை பதிவு செய்துள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். 2009 ல் 339,000 மெட்ரிக் தொன்னாக இருந்த மீன் உற்பத்தி 2012 ல் 486,000 மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது என அவர் குறிப்பிட்டார். அடுத்த இரு ஆண்டுகளுக்குள் உள்நாட்டு மீன் உற்பத்தியினை 685,000 மெட்ரிக் தொன்கள் என்ற இலக்கு நோக்கி நகர்த்தவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். இவ் உற்பத்தி அதிகரிப்புக்கு காரணம் வடக்கு கிழக்கில் பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டமையே ஆகும்.

### புதிய வட்டார முறையில் மட்டக்களப்பிலேயே முதலாவது உள்ளூராட்சி தேர்தல்

மட்டக்களப்பில் மார்ச் 17ந் திகதியுடன் 9 உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக் காலம் நிறைவுறுவதைத் தொடர்ந்து அவற்றிற்கான தேர்தலை புதிய வட்டார முறையில் நடாத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர் தெரிவித்துள்ளார். இவ்வருடம் ஜனவரி மாதத்திற்குள் புதிய வட்டார தேர்தல் முறையினை இயங்குநிலைக்கு கொண்டுவந்துவிடுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். இதன் பின்னரேயே இவ் 9 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலை நடாத்த உத்தேசித்துள்ளதாகவும் மார்ச் 17ந் திகதியின் பின் இவ் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரை நியமிக்கும்படி கிழக்கு மாகாண சபைக்கு ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## The Leader

### எல்லாவற்றையும் வெளிப்படுத்தியது அறிக்கை

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நிகழ்ந்த வன்முறை தொடர்பாகவும் கலவரத்துக்கு முன்னும் பின்னும் சிறைப்பாதுகாவலரின் நடத்தை தொடர்பாகவும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மூவர் அடங்கிய குழுவை புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சர் நியமித்திருந்தார். அவர்களது அறிக்கையானது வெளிப்படுத்தியுள்ள தகவல்கள் இவ்வன்முறை தொடர்பான அனைத்து உண்மைகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும் என்பதால் பொதுமக்களின் கைகளுக்கு கிடைக்காதவாறு பேணுவதில் உரியவர்கள் அதீத கவனம் செலுத்திவருவது தெரியவருகிறது. 27 பேரை பலிகொண்டு 40 பேரை காயப்படுத்திய இச்சிறைச்சாலை வன்முறை தொடர்பாக சிறைப்பாதுகாவலர் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தது குறிப்பிடத்தக்கது. 100 பக்க அறிக்கையானது சிறைப்பாதுகாவலர் தொடர்பாக பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளதால் அவற்றை மக்கள் பார்வைக்கு வெளிவிடுவது இல்லையென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சர் தெரிவித்துள்ளார். முழு அறிக்கையும் வெளியிடப்படுமானால் அது நாட்டிற்கு கலவரத்தை உருவாக்கிவிடும் என்பதால் அவ்வறிக்கையின் சில பகுதிகளை மட்டுமே வெளியிடப்படவுள்ளது. இவ்வறிக்கையின் அடிப்படையில் பொறுப்பானவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### பொதுநலவாயம் இலங்கைக்கெதிராக நடவடிக்கை எடுக்காது

இலங்கை விடயங்களை தமது நடவடிக்கைக் கூட்டத்தொடரில் ஆராய்வது இல்லை என்ற முடிவினை பொதுநலவாயம் எடுத்துள்ளதாக அவ்வமைப்பின் செயலாளர் அலுவலகத்திலிருந்து தகவல் வெளியாகியுள்ளது. இச்செய்தி இலங்கைக்கு சற்றேனும் நிவாரணத்தைத் தருமென்பது உறுதி.


பொதுநலவாய அமைச்சர்கள் நடவடிக்கைக் குழுவில் இலங்கையை ஒரு விடயமாக சேர்க்க வேண்டுமென பலத்த முயற்சிகள் மேற்கொள்ளப்-பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. விசேடமாக கனடா இதற்காகப் பெரும் பிரேயத்தனையை மேற்கொண்டிருந்தது. இலங்கையில் நலிவடைந்துள்ள மனித உரிமை விடயங்களை பொதுநலவாய அமைச்சர்களின் நடவடிக்கைக் குழுவில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் விவாதிக்க வேண்டும் என்பதே கனடாவின் அப்பிரேயத்தனமாக இருந்தது. எனினும் பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் 2013இல் இலங்கையில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய தலைவர்களின் கூட்டம் திட்டமிட்டவாறே நிகழும் என்பதை உறுதிப்படுத்தியதுடன் அக்கூட்டத்தில் இலங்கை தொடர்பான எவ்விடயங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

### "இந்தியாவே வெளியேறு" தே.சு.மு – ஜா.ஹெ.உ

இலங்கைக்கெதிராக ஜெனிவாவில் வாக்களித்ததால் இந்தியாவை இலங்கையின் பொருளாதார ஒப்பந்தங்கள் யாவற்றிலுமிருந்து வெளியேறுமாறு ஜாதிக ஹெல உறுமயவும் தேசிய சுதந்திர முன்னணியும் போர்க்கொடி தூக்கியுள்ளன. தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் மொஹமட் முசமில் கருத்துத் தெரிவிக்கும் போது இந்தியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் இலங்கைக்குப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பாக கவனஞ்செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்தார். இலங்கையிலிருந்து பொருளாதார ரீதியில் பல நன்மைகளை உழைக்கும் இந்தியா, இலங்கைக்கெதிராக ஐக்கிய நாடுகள் சபையில் வாக்களித்தது எவ்வாறு என ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிச் செயலாளர் உதயன் கம்மன் பில தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் இலங்கையிலிருந்து எவ்வித பொருளாதார நன்மைகளையும் இந்தியா அனுபவிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்



## திருமலை மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் - 2013 ஆரம்பம்

2013ம் ஆண்டிற்கான மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 30ம் திகதியிலிருந்து திருகோண-மலையில் நடைபெறவுள்ளதாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் மலைமுரசிற்கு தெரிவித்தார். தொடர்ந்து ஐந்து வாரங்களுக்கு நடைபெறவுள்ள இம் மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதலாவது வார விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 30 மற்றும் 31ம் திகதிகளில் ஏகாம்பரம் விளையாட்டுத் திடலிலும் மக்ஹெய்ஸர் விளையாட்டுத் திடலின் உள்ளக அரங்கிலும் நடைபெறவுள்ளது.

பூப்பந்து, மேசைப்பந்து, கூடைப்பந்து மற்றும் மல்யுத்தப் போட்டிகளே இவ்வாரத்தில் நடைபெறவிருக்கின்றன.

திருமலை மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்படும் இம்மாவட்ட விளையாட்டுப் போட்டி மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர். டிசில்வா அவர்களின் மேற்பார்வையின்கீழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ச. விஜேநீதன் அவர்களின் ஒழுங்கமைப்பின்கீழ் நிகழவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## உலகின் சிறந்த வீரருக்கான லாரஸ் விருதை மூன்றாவது முறையாக தட்டிச் சென்றார் - மின்னல் மனிதன் -

உலகின் சிறந்த வீரருக்கான லாரஸ் விருதை மூன்றாவது முறையாக தட்டிச் சென்றார் "மின்னல் மனிதன்" உசைன் போல்ட். "லாரஸ் உலக விளையாட்டு விருது" கடந்த 2000 ம் ஆண்டு முதல், வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான விருது பட்டியலுக்கு, பல்வேறு விளையாட்டுகளில் இருந்து சுமார் 50 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.



இதில் சிறந்த வீரருக்கான விருதை, லண்டன் ஒலிம்பிக்கில் 100, 200 மீ., மற்றும் 4x100 மீ., ஓட்டத்தில் தங்கம் வென்ற ஜமைக்காவின் உசைன் போல்ட், 26, மூன்றாவது முறையாக தட்டிச் சென்றார். இதற்கு முன் 2009, 2010ல் இவ்விருதை வென்றுள்ளார். சுவிட்சர்லாந்து டென்னிஸ் வீரர் பெடரர், 2005 முதல் 2008 வரை என, தொடர்ச்சியாக 4 முறை வென்றுள்ளார்.

## பூப்பந்து விருதுக்கு செய்னா நேவல் பெயர் பரிந்துரை



உலகின் பூப்பந்து கூட்டமைப்பு சார்பில் வழங்கப்படும் சிறந்த வீரர்களுக்கான விருதுக்கு இந்தியாவின் செய்னா நேவல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

உலகின் இரண்டாம் நிலை பூப்பந்து வீராங்கணையான இவர் இந்தோனேசிய ஓபன், டென்மார்க் ஓபன், தாய்லாந்து ஓபன் ஆகிய தொடர்களில் சாம்பியன் பட்டம் வென்றவர். அத்தோடு லண்டன் ஒலிம்பிக்ஸ்சில் வெண்கலப் பதக்கமும் வென்றவராவார்

## குத்துச் சண்டையில் புதிய விதி

குத்துச் சண்டை போட்டிகளில் வீரர்கள் இனித் தலைக்கவசம் அணியத் தேவையில்லை என புதிய விதி கொண்டுவரப்பட இருப்பதாக சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைப்பு செய்தி வெளியிட்டுள்ளது. இதன்படி பெரிய அளவிலான தொடர்களில் மட்டும் பங்கேற்கும் வீரர்களுக்கு மட்டும் தலைக்கவசம் அணிந்து கொள்வதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இதையடுத்து வரும் அக்டோபரில் நடக்கவுள்ள உலக சாம்பியன்ஷிப் 2016 ரியோடி ஜெனிரோ ஒலிம்பிக்கில் இவ்விதி பயன்படுத்தப்பட உள்ளது.



## மண்டை உடைந்தது மதுசாலையில் மதியிழந்தார் ரைடர்

நியூசிலாந்து, மட்டைப்பந்து வீரர் ஜெஸ்ஸி ரைடர் கோமா நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் நகரில் உள்ள மதுபான விடுதியொன்றில் ஏற்பட்ட தகராறில் தலையில் மதுப்போத்தலால் பலமாக தாக்கப்பட்டதை அடுத்து ரைடர் கோமா நிலையை அடைந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

அவர் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



# போரொன்றின் ஆரம்பமும் அதன் முடிவும் ...

போரொன்றை ஆரம்பிக்கும் போது அதன் முடிவையும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளுதல் என்பது மக்கள் போராட்டங்களின் வெற்றிக்கு மிகவும் தேவையான ஒரு தந்திரோபாயமாக உள்ளது. எத்தனையோ மக்கள் போராட்டங்கள் நியாயமான காரணங்களுக்காக உறுதியான கட்டமைப்புடன் தெளிவான இலக்கை நோக்கி நடாத்தப் பட்டாலும் அப் போராட்டங்களை முடிவுறுத்திய விதத்தால் அவை செல்லாக் காசாகப் போயிருப்பதை நாம் வரலாற்றில் பார்க்கின்றோம். எனவே போராட்டம் ஒன்றின் வெற்றி அதன் ஆரம்பத்தில் மட்டுமல்ல வினைத்திறனான முடிவுறுத்தலிலுமே தங்கியிருக்கின்றது.

இவ்வாறு ஏன் இக் கணத்தில் எழுத வேண்டியிருக்கின்றது என்பதை நீங்கள் சிந்திப்பீர்கள். எமக்காக எமது தாய்நாட்டின் தொப்புள்கொடி உறவுகள் போராட்டம் ஒன்றை ஆரம்பித்து அப் போராட்டம் தொடர்ந்த வண்ணமாகவுள்ளது. ஜெனீவா முன்மொழிவுகளுக்காக இந்திய ஆதரவைக் கோரி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் ஈழத் தமிழர் படுகொலையை இனப் படுகொலையென இந்திய அரசு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் தொடர்ந்து நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைய திகதியில் தமிழ்நாட்டின் மாணவர்களால் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்படும் என்ற கோசத்துடன் இப்போராட்டம் நடாத்தப்படுகின்றது.

இப் போராட்டம் எப்புள்ளியில் முடிவடையும்? ஏனெனில் நீண்டகாலம் நடைபெறும் மக்கள் போராட்டங்கள் நாளாக நாளாக மக்கள் பங்களிப்பை இழந்து விடும் அபாயம் உள்ளது. மக்கற் பங்களிப்பு அற்றுப் போக போராட்டத்தின் காத்திரத் தன்மை தாமாகவே அற்றுப் போய்விடும். மேலும் இந்திய தமிழ்நாட்டு மாணவர்களின் போராட்டத்தை குறித்த காலத்தின் பின் திசைதிருப்பிவிட அனைத்து அரசுகளும், மத்திய அரசோ அல்லது மாநில அரசோ, முயற்சிக்கும். அதற்கான முன்னோட்டமாக மாணவர் போராட்டங்களின் போதான வார்த்தை உச்சரிப்புக்களை அரசின் உளவுத்துறைகள் அவதானித்துக் கொண்டிருக்கும். அவ்வாறு அவதானிக்கப்படுமாயின் இன்றைய திகதியில் மாணவ அணியொன்றால் முழங்கப்பட்ட "விடுதலைப் புலிகளை உருவாக்குவோம்" என்ற செய்தி போராட்டத்தைத் திசைதிருப்பப் போதுமானதாக இருக்கும். ஏனெனில் விடுதலைப் புலிகளின் அமைப்பு இந்திய இறையாண்மைக்கு இன்றைக்கும் அச்சுறுத்தலாகவே இருப்பதாக கூறும் மத்திய இந்திய அரசு அவ்வமைப்பை இந்தியாவில் தடை செய்தே வைத்துள்ளது. எனவே அவ்வமைப்பின் மீளுருவாக்கம் தொடர்பான பேச்சுக்கள் இறையாண்மைக்கு எதிரானவையாகக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் நிலை உள்ளது.

போராட்டம் ஒன்றை வினைத் திறனுடன் முடிவுறுத்துவதென்பதும் போராட்ட வெற்றியின் படியொன்று என்று இப்போது உங்களுக்குச் சிறிதளவேனும் விளங்கியிருக்கும் என்றே எண்ணுகின்றேன்.

உண்மையில் தமிழ்தேச மாணவர்களின் போராட்டம் மிக விரைவில் யாதாயினும் ஒரு சரியான தருணத்தில் முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

அவ்வாறு கொண்டுவரப்படும் போது மாணவர்கள் யாவருக்கும் தமது போராட்டம் வெற்றியுடன் நிறைவுற்றதான மனோ-நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். இப் போராட்டம் தோல்வியடைந்தது என்ற மனநிலை ஏற்படுமானால் அவர்கள் தொடர்ந்தும் போராட முயற்சிப்பர். அம் முயற்சியின் வினைத்திறன் கேள்விக் குரியதாகவே இருக்கும்.

நெருப்பை எரித்தலும் தீப்பந்தங்களைத் தயாரித்துப் போராடுதலும் என்னும் இரண்டு பதங்களுக்குள் மக்கள் போராட்டங்களை உணர்ந்து கொள்ளத் தலைப்படலாம். நெருப்பைத் தொடர்ந்து எரிய விட்டுக்கொண்டு தேவைப்படும் போது மட்டும் அந் நெருப்பிலிருந்து தீப்பந்தங்களை உருவாக்கி எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும். தீப்பந்தங்கள் நீண்ட நாட்களுக்கு எரியாது. அவை அவிந்து விடும். தீப்பந்தங்களை மட்டும் கவனித்தோமானால் நெருப்பும் அணைந்து தீப்பந்தங்களும் அவிந்து போராட்டம் பெயரற்றுப் போய்விடும்.

இக்கணத்தில் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முக்கிய பகுதிகளை இங்கு தருகின்றேன் "தமிழக சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் மட்டுமே இத் தீர்மானம் செயல் வடிவம் பெறும். இத் தீர்மானத்தை இந்திய மத்திய அரசை ஏற்றுக் கொள்ளச் செய்யும் ஆற்றல் தமிழக மாணவர்களிடம் உள்ளது என்று நாம் கருதுகிறோம். இதற்கான செயற்பாடுகளை ஒரு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஊடாகத் தமிழக மாணவர்கள் தொடர்ச்சியாக முன்னெடுப்பார்கள் என நாம் உறுதியாக நம்புகிறோம்" எனவே இங்கு திட்டமிட்ட வேலைத்திட்டம் என்பதை மாணவர் போராட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய தேவை இருப்பதைக் காணலாம்.

தமிழ்நாட்டின் முக்கிய ஈழத்தமிழர் ஆதரவுத் தலைவர்கள் இக்கணத்தில் தீப்பந்தங்களை வெற்றிகரமாக அவியச் செய்ய முயற்சிக்க வேண்டும். தீயை அல்ல. அதை எரியவிட்டு தேவைப்படும் போதெல்லாம் தீப்பந்தங்களாக்கிப்.... (சஞ்சுதன்)



மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 30. 03. 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.